இலங்கையில்

# சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான அரசியலமைப்பு நெருக்கடி - 2018



கலாநிதி தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்

குமரன் புத்தக இல்லம்

இலங்கையில்
சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான
அரசியலமைப்பு நெருக்கடி - 2018

இலங்கையில் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான
அரசியலமைப்பு நெருக்கடி - 2018

எழுதியது தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்

© 2019

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Constitutional Crisis between Legislature
and Executive in Sri Lanka - 2018
by Thanabalasinkam Kirushnamohan

© 2019

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail: kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: # 814

ISBN 978-955-659-626-7

# அணிந்துரை

இலங்கையில் 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆம் திகதி யாரும் எதிர்பார்த்திராத அரசியல் நிகழ்வு ஏற்பட்டது. இதனால் ஜனநாயகம் என்பது கேள்விக்குட்பட்டது. ஆனால் அரசியலமைப்பிற்கு எதிரான வன்முறை தலைதூக்க விடாமல் ஜனநாயகத்தை உயர்நீதிமன்றம் நிலைநாட்டியது. இந்த நிலைமை பற்றியும் இதன் பின்னணியில் அரசியலமைப்பு, பாராளுமன்றம், இறைமை, அடிப்படை உரிமைகள் பற்றியதுமான தனிவரைபு நூல் (Monograph) எழுதப்பட்டுள்ளது. இவ் நூல் மூலம் 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பல்வேறு அரசியல் குழப்பங்களுக்கும், ஜனநாயக அழிப்புகளுக்கும் முறையான விளக்கம் கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

இந்நூலை எழுதிய முனைவர் தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன் சமூக விஞ்ஞானங்கள் துறையின் அரசியல் விஞ்ஞான பாடத்தின் முதுநிலை விரிவுரையாளர். அர்ப்பணிப்புடன் கற்றல், கற்பித்தலை மேற்கொண்டு வருபவர். இவர் அரசியல் விஞ்ஞானம் பற்றிய பல நூல்களின் சொந்தக்காரர். இவர் முன்பு எழுதிய பல நூல்கள் மாணவர் மத்தியிலும் அரசியல் களத்திலும் விரும்பி வாசிக்கப்பட்டதை நான் அறிவேன். இவ் அடிப்படையிலும், தற்போதைய அரசியல் சூழலிலும் முக்கிய வாசிப்புப் பொருளாக இந்நூல் அமையும் என நினைக்கின்றேன். ஆசிரியர் அவர்கள் தொடர்ந்தும் நூல்களை எழுதி வெளியிட்டு எமது கல்வி அறிவிற்கு வித்திட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி ஞானமுத்து தில்லைநாதன்**
தலைவர், சமூக விஞ்ஞானங்கள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
செங்கலடி.

# முகவுரை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆம் திகதி எவ்வித முன்னறிவித்தலும் இன்றி ரணில் விக்கிரமசிங்க அவர்களைப் பிரதம மந்திரிப் பதவியிலிருந்து நீக்கியதுடன், தனது கட்சியில் அரசியல் எதிரியாக இதுவரை அவரால் கருதப்பட்ட மகிந்த இராஜபக்ஷ அவர்களைப் பிரதம மந்திரியாக நியமனம் செய்தார். இதன் உச்சக்கட்டச் செயலாக 2018ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 09ஆம் திகதி பாராளுமன்றத்தினையும் கலைத்துத் தேர்தலுக்கான திகதியையும் அறிவித்திருந்தார்.

அரசியலமைப்புக்கு மாறாக செயற்பட்டமை மூலம் அரசியலமைப்பு ரீதியான வன்முறையினை ஜனாதிபதி புரிந்து நாட்டின் சட்டவாட்சிக்குச் சவால் விடுத்தார். மேலும் மக்கள் இறைமை, வலுவேறாக்கம், அடிப் படையுரிமைகள் போன்றவற்றிற்கு சவால் விடுத்ததுடன், உறுதியற்ற அரசியல் நிலைமையினையும் நாட்டில் உருவாக்கியிருந்தார். அரசியல் உறுதியற்ற நிலையிலிருந்து நாட்டினை உயர்நீதிமன்றம் பாதுகாத்திருந்தது. உயர்நீதிமன்றம் சட்டவாட்சியையும், மக்கள் இறைமையையும் பாதுகாத்த துடன், சட்டமே உயர்ந்தது என்பதையும், சட்டத்திற்கு மேலானவர்கள் யாரும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்தியது.

இவ்வகையில் 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை இலங்கையில் நிலவிய இவ் அசாதாரண அரசியல் காட்சிநிலை குறித்துத் தர்க்க ரீதியாக இத்தனிவரைபு நூல் (Monograph) விவாதிக்கின்றது.

இத்தனிவரைபு நூலுக்கு அணிந்துரை வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞானங்கள் துறைத் தலைவர் கலாநிதி ஞானமுத்து தில்லைநாதன் அவர்களுக்கு எனது நன்றிகள். மற்றும் இத்தனிவரை நூலை பதிப்பித்து உதவிய குமரன் பதிப்பகத்தினருக்கும் எனது நன்றிகள்.

**கலாநிதி தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்**
முதுநிலை விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானம்
சமூகவிஞ்ஞானங்கள் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
செங்கலடி.

# இலங்கையில் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான அரசியலமைப்பு நெருக்கடி - 2018

## 1. அறிமுகம்

மைத்திரிபால சிறிசேன (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) மற்றும் ரணில் விக்கிரமசிங்க (ஐக்கிய தேசியக் கட்சி) ஆகியோர்களின் கூட்டுத் தலைமையில் நல்லாட்சிக்கான அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பதவிக்கு வந்த புதிய நல்லாட்சி அரசாங்கம் நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்பிற்குப் பத்தொன்பதாவது திருத்தம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இத்திருத்தம் மூலம் ஜனாதிபதிக்கு இதுவரை இருந்து வந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவை பாராளுமன்றத்திற்கும் பிரதம மந்திரிக்கும் வழங்கப்பட்டன. மத்தியவங்கி பிணைமுறி விவகாரத்திற்குப் பின்னர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராகப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது. அரசியலமைப்பு ரீதியாகப் பிரதம மந்திரியைப் பதவி நீக்க முடியாது அல்லது அதற்கான சந்தர்ப்பம் இல்லை என்ற நிலையிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிரதம மந்திரிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் பிரதமமந்திரி அரசியலமைப்பு ரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியா கவும் பலமான நிலையில் இருக்கின்றார் என்ற உண்மை உணரப்பட்டது. ஜனாதிபதிக்கும், பிரதமமந்திரிக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையில் அதிகாரங்களைப் பகிரும் விடயத்தில் பத்தொன்பதாவது திருத்தம் பலமானதாகக் காட்சிதந்தது. ஆனால் 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தமானப் பத்திரிகைப் பிரகடனம் ஒன்றின் மூலம் பிரதமராகப் பணியாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை, ஜனாதிபதியாகப் பணியாற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால

சிறிசேன அவர்கள் பதவி நீக்கம் செய்திருந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட ஆச்சரியமிக்கதும் துணிச்சல் மிக்கதுமான அரசியல் நகர்வு, அவருக்கும் பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இதுவரை இருந்துவந்த அரசியல் மோதலின் அல்லது ஒவ்வாமையின் தீவிரத் தன்மையின் உச்ச நிலையினைக் காட்டியது. இக்காட்சியானது வரலாற்றில் இதுவரை நிகழாத அரசியலமைப்பு நெருக்கடி இலங்கையில் தோன்றியுள்ளது என்ற செய்தியைத் தேசிய மற்றும் சர்வதேசளவில் பகிர்ந்து கொண்டது. புதிதாக அரசியலமைப்பு நெருக்கடி ஒன்றினை உருவாக்குவதன் மூலம் இதுவரை தனது அரசியல் எதிரியாகக் காட்சிப்படுத்திய மஹிந்த இராஜபக்ஷவை நண்பனாக்கிப் பிரதம மந்திரிப் பதவியைக் கையளித்து, தனக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் நிகழ்ந்து வந்த அதிகாரப் போராட்டத்தில் தனக்கு வலுச் சேர்க்கும் வகையில் மும்முனை ஆளுமை அதிகாரப் போராட்டம் ஒன்றிற்கான பாதையினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து விட்டார். மூன்று பெரும் முதிர்ந்த அரசியல் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட இவ் அதிகாரப் போராட்டமானது அரசியலமைப்பின் உயர் தன்மையினைச் (Supremacy) சீரழித்தது. அத்துடன், அரசியலமைப்பின் அடிப்படையுரிமைச் சரத்துக்கள், நீதிபரிபாலனம் தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் விவாதித்து வியாக்கியானப்படுத்தும் நிலையும் உருவாகியது.

இந்நிலையில், இலங்கையில் அரசியல் அமைதியின்மையும், நெருக்கடியும் எங்கிருந்து வருகின்றன? அது எவ்வாறு உருவாகின்றது? அதன் பின்னணி என்ன? இலங்கையில் தோன்றி மறைந்த அரசியல் நெருக்கடியின் மையம் அரசியல்யாப்புவாதத்தின் தெளிவின்மையா? அல்லது மிகத் தெளிவுடன் அரசியலமைப்பு நெருக்கடிக்கு ஊடாக அரசியல் ரீதியான நகர்வுகளை மேற்கொண்டு அதிகாரத்திற்கான போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சித்தாரா? போன்ற வினாக்களைக் கட்டமைத்து ஆராய்ந்து பார்க்க முடியும். இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்குச் செய்யப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வினாக்கள் ஆய்வு செய்யப்படவும் வேண்டும். இவ்வகையில் பண்புரீதியான தரவுப்பகுப்பாய்வு முறை இவ் ஆய்விற்கு (Quantitative Method) பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், உய்த்தறிமுறையூடாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இதற்காக இலங்கை ஜனநாயக சோசலிசக்

குடியரசின் அரசியலமைப்பு, வர்த்தமானப் பத்திரிகைகள், உயர்நீதிமன்றத் தீர்ப்பு அறிக்கை, நிலையியற் கட்டளைச் சட்டம், ஜனாதிபதியின் உரைகள், மற்றும் உத்தியோக பூர்வ இணையத்தளங்கள் அவற்றில் வெளியான கட்டுரைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**உ. அரசியல்யாப்புவாதம்**

நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனநாயகமும், அரசியல்யாப்புவாதமும் (Constitutionalism) ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படும் இரு கலப்புச் சமனிலைத் (Hybrid Balance) தத்துவங்களாகும். அரசுகள் நல்லாட்சியை உருவாக்க ஜனநாயகப் பண்புகளை மாத்திரமன்றி அரசியல்யாப்புவாதத்தின் பண்புகளையும் முழுமையாகக் (Holistic Approach) கருத்தில் கொள்ள வேண்டும். அரசியல்யாப்புவாதம் அண்மையில் தோற்றம் பெற்ற நவீன எண்ணக்கருவாகும். இன்று சட்டம், ஒழுங்கு என்பவற்றினால் அரசுகள் ஆட்சிசெய்யப்படுவதற்கான சித்தாந்தமாக அரசியல்யாப்புவாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தனிநபர்களின் உயர்நிலையை விட சட்டத்தின் உயர்நிலையினை அங்கீகரிக்கும் சித்தாந்தமாக அரசியல்யாப்புவாதம் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. மேலும் தேசியவாதம், ஜனநாயகம் போன்ற எண்ணக்கருக் களின் பிரதிவிம்பமாகவும் அரசியல்யாப்புவாதம் உள்ளது. பிறட்றிச் (Friedrich) என்பவரது கருத்தின்படி “அரசாங்கச் செயற்பாட்டிற்குப் பகுக்கப்பட்டு வழங்கப்பட்ட அதிகாரத்தை வெளிப்படுத்துகின்றதொரு செயல்முறையே அரசியல்யாப்புவாதம்” ஆகும். சட்டவாட்சி, வலுவேறாக்கம், சமநிலைத் தலையீடு, நல்லாட்சி என்பவற்றை அரசியல் யாப்புவாதத்தின் உயர்நிலையினைக் காட்டுகின்ற அளவீடுகளாகக் கொள்ளலாம். இவ்வகையில் இறையாண்மை, வலுவேறாக்கம் சமனிலைத்தலையீடு, பொறுப்புக் கூறும் அரசாங்கம், சட்டவாட்சி, நீதித்துறைச் சுதந்திரம், மனித உரிமைகள் போன்ற முக்கிய இயல்புகளை அரசியல்யாப்புவாதம் கொண்டுள்ளதாக கென்கின் (Henkin) என்னும் அமெரிக்க கல்வியாளர் கூறுகின்றார் (Bazezew Maru: September 2009).

i. சட்டபூர்வ ஜனநாயக அரசாங்கங்களுக்கான அதிகாரம் மக்களின் சம்மதத்திலிருந்தே பெறப்படுகிறது. இதனாலேயே ஜனநாயக அரசாங்கங்கள் மக்களினாலான அரசாங்கம் மக்களுடைய அரசாங்கம் என விளிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் செயற்

பாட்டிற்கான முறையான அதிகாரத்தை இறைமை சார்பில் பிரசைகள் வழங்குகின்றனர். இது பின்னர் தேர்தல் தொகுதி பிரதிநிதித்துவத்தினூடான அரசாங்க அதிகாரமாகின்றது. தீர்மானம் எடுக்கும் செய்முறையில் மக்கள் வேறுபட்ட வடிவங்களில் பங்கெடுக்கின்றார்கள். தேர்தல் மூலம் பிரதிநிகளைத் தெரிவு செய்தல் என்பது பிரபல்யமான அரசியல் பங்குபற்றலாகின்றது. இத்தேர்தல் சுதந்திரமாக, வெளிப்படையாக, நேர்மையாக நடைபெறவேண்டும். மக்கள் தமது இறைமையினை வெளிப்படுத்தும் ஏனைய பொறிமுறைகளாக தொடக்கிவைத்தல் (Initiative), திருப்பியழைத்தல் (Recall) மற்றும் சர்வஜனவாக்கெடுப்பு போன்ற முறைகள் உள்ளன. பொதுமக்களின் நலன்களுடன் தொடர்புபடும் விடயம் தொடர்பாக அரசாங்கம் தீர்மானம் எடுக்க முன் இவ்விடயம் தொடர்பாக மக்கள் கருத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அரசியல் யாப்புவாதம் எதிர்பார்க்கின்றது. எனவே அரசியல் யாப்புவாதத்தின் பிரதான இயல்பு மக்களின் இறையாண்மை அங்கீகரிப்பட வேண்டும் என்பதாகும்.

ii. அரசாங்கத்தின் மூன்று நிறுவனங்களாகிய சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகியன ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் இந்நிறுவனங்களின் அதிகாரமும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திடமும் அதிகாரம் குவிக்கப் பட்டிருப்பதை அரசியல்யாப்புவாதம் விரும்புவதில்லை. அரசாங்க நிறுவனங்களாகிய சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று நிறுவனங்களில் ஏதாவதொரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் ஏனைய நிறுவனங்கள் உள்வாங்கப்படுமாயின் அதிகாரத் துஷ்பிரயோகம் நிகழ்வதற்கான சந்தர்ப்பம் உருவாகும். இதன்விளைவாகச் சர்வாதிகாரம் அல்லது கொடுங்கோன்மை ஆட்சி உருவாகும். இவ்வாறு உருவாகுமானால் மக்கள் தமது உரிமைகளையும் சுதந்திரத்தையும் இழக்க வேண்டியேற்படும். இதன்பொருள் மூன்று நிறுவனங்களும் தனித்தனியே செயற்பட வேண்டும் என்பதல்ல. பதிலாக மூன்று அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையில் அதிகாரம் பிரிக்கப்பட்டிருப்பதுடன், மூன்று நிறுவனங்

களுக்கும் இடையில் சமநிலைத் தலையீடுகளும் இருக்க வேண்டும். அதாவது மூன்று நிறுவனங்களும் தனித்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்தும் பணியாற்ற வேண்டும். இவ்வாறான பண்புகளைக் கொண்ட அரசியல்யாப்புவாதத்தினை அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற பல நாடுகளில் காணலாம்.

iii. அரசியல்யாப்புவாதக் கோட்பாடு பொறுப்புக் கூறும் அரசாங்கம் தொடர்பாகக் கூறுகின்றது. ஜனநாயக அரசாங்கங்களைத் தமக்குச் சேவை செய்யும் சேவகர்களாக மக்கள் கருதுகின்றார்கள். மக்களின் நலன்களுக்காக மக்களின் சார்பில் மக்களால் உருவாக் கப்படும் அலுவலகமே அரசாங்கம் எனக் கூறலாம். பிரான்சின் மனித உரிமைப் பிரகடனம் சரத்து *15* "தம்மை நிர்வகிக்கும் ஒவ்வொரு பொது நிர்வாக முகவர் அலுவலகங்களும் (Agent) தமது நிர்வாகச் செயல்களுக்குப் பொறுப்பெடுக்க வேண்டும் எனக் கோரும் உரிமை சமுதாயத்திற்குள்ளது" எனக்கூறுகின்றது (Declaration of the Rights of Man and Citizen Approved by the National Assembly of France, August 26, 1789). மக்களின் சார்பில் செயற்படும் அரசாங்கம் தனது செயல்கள் தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும். மக்களுக்குப் பொறுப்புக்கூற மறுக்கும் அரசாங் கத்தினை நீக்கிவிடும் அல்லது வெளியேற்றும் அதிகாரம் மக்களுக்குள்ளது என அரசியல்யாப்புவாதம் கூறுகின்றது.

iv. சட்டவாட்சிக் கோட்பாடு பிரித்தானியாவில் தோற்றம் பெற்றதாகும். பிரித்தானிய அரசியலமைப்பு முறைமையின் அடிப்படை இயல்பு களில் சட்டவாட்சியும் ஒன்றாகும். "சட்டமே உயர்ந்தது" என்பதே சட்டவாட்சிக் கோட்பாட்டின் சாராம்சமாகும். அரசாங்கம் சட்டத்தின் எல்லைக்குள்ளிருந்து சட்டப்படி செயற்பட வேண்டும். சட்டவாட்சிக் கோட்பாடு அரசாங்கம் செயற்படுவதற்கான சட்டம் தொடர்பாகக் கூறுகின்றது. பதிலாக தனிமனித சட்டத்தைக் கூறவில்லை. அரசாங்க நிறுவனங்களுக்குள் பணியாற்றும் தனிநபர்கள் அனைவரும் தமது உத்தியோகக் கடமைகளையும், பொறுப்புக் களையும் சட்டப்படியே செய்யவேண்டும். சட்டப்படியான பணிகள் என்பது சட்டத்தின் உயர்நிலையினைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றது. "சட்டமே ஆட்சி செய்ய வேண்டும். தனிநபர்கள்

தன்னிச்சையான தீர்மானங்களை நிறைவேற்றி ஆட்சி செய்ய முடியாது" என்பதே சட்டவாட்சியின் சாராம்சம் எனக் கூறலாம். ஏ.வி.டைசி (A.V. Dicey) *1885* ஆம் ஆண்டு எழுதிய *The Law of the Constitution* என்னும் நூலில் சட்டவாட்சிக் கோட்பாட்டின் மூன்று பண்புகள் தொடர்பாக கூறியுள்ளார்.

1. சட்டத்தின் மேலாண்மை: எல்லா மனிதர்களும் சட்டத்தினால் மட்டும் ஆட்சி செய்யப்பட வேண்டும். சட்டத்திற்குப் புறம்பாக தனிமனிதன் தண்டனை பெறக்கூடாது. சட்டமே ஆட்சி செய்ய வேண்டும்.

2. சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள்: சட்டத்தை விட மேலானவன் இருக்க முடியாது. ஒவ்வொரு மனிதனும் சட்டத்திற்குட்பட்டவன். நீதிமன்ற நீதிபரிபாலனத்திற்குரியவன். ஆட்சியாளன், உயர் உத்தியோகத்தர்கள், பணம்படைத்தவர்கள், வறியவர்கள், சாதாரண பிரஜை, பால்நிலை, நிறம், இனம், சமயம் போன்ற பாகுபாடுகள் இல்லாமல் சட்டத்தின் முன் மக்கள் அனைவரும் சமமாக நடாத்தப்பட வேண்டும்.

3. தனிமனிதவுரிமைகள் முதன்மையானவை: தனிமனிதவுரிமை களை அரசியலமைப்பினால் மாத்திரம் பாதுகாக்க முடியாது. தனிமனிதவுரிமைகள் அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு நீதிமன்றங்களால் நடைமுறைப்படுத்த வேண்டும்.

டைசியின் சட்டவாட்சிக் கோட்பாடு சமகாலத்தில், உள்ளவாறு ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பதிலாக இன்று சட்டவாட்சித் தத்துவம் மேலும் விருத்தி செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் சட்டவாட்சிக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதே அரசியல் யாப்புவாதத் தத்துவத்தின் எதிர்பார்ப்பாகும்.

v. நீதித்துறைச் சுதந்திரம் நீதிபரிபாலன முறைமையின் அடிப்படைத் தத்துவமாகும். சட்டவாட்சியை நிறுவுவதற்கு நீதித்துறை சுதந்திரம் அவசியமானதாகும். நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படும் போது மாத்திரமே சட்டத்தின் இலக்கு, நோக்கம், சட்டவாட்சி போன்றவை களைச் சுதந்திரமாக வியாக்கியானம் செய்யமுடியும். இதன்மூலமே

பிரசைகளின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படும். நீதித்துறைச் சுதந்திரம் என்பது சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத் துறையின் தலையீடு இல்லாமல் அல்லது அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமல் நீதிபதிகள் சுதந்திரமாக நீதிபரிபாலனம் செய்தல் எனப் பொருள் கொள்ள முடியும். சட்டவாட்சியூடாக தனிமனிதர்களின் உரிமைகள், சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுக் கௌரவிக்கப்பட வேண்டும். நீதிமன்றங்கள் மனிதவுரிமைகளை கௌரவித்துப் பாதுகாப்பதில் முதன்மையானவை. சட்டவாட்சியையும், சமூகச் சுதந்திரத்தையும் பாதுகாப்பது நீதித்துறையின் பிரதான பணியாகும். எனவே அரசியலமைப்பினை உயர்நிலையில் பாதுகாப்பதற்கு நீதித்துறை சுதந்திரமாகச் செயற்பட வேண்டும் என அரசியல்யாப்புவாதம் எதிர்பார்க்கிறது. மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல், நடைமுறைப்படுத்துதல் போன்ற வற்றிற்கான முழுமையான திறனும், பொறுப்புக்களும் நீதித்துறையிட மேயுள்ளது. நீதித்துறை தனது நீதிபரிபாலனத்தின் மூலமே இப்பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும். சுதந்திரம் மற்றும் உரிமைகளின் பாதுகாவலன் நீதித்துறையேயாகும். சுதந்திரமும், உரிமைகளும் சட்டவாட்சித் தத்துவத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும். சட்டவாட்சி நிலைபெறும் போது நீதித்துறை தனது நீதிபரிபாலனத்தை நிறுவமுடியும்.

vi. எல்லா மனிதர்களும் உரிமைகள், கௌரவத்துடன் சுதந்திரமாகப் பிறக்கின்றார்கள். அவர்கள் நியாயமும் மனச்சாட்சியுமுடையவர்கள். சகோதரத்துவத்துடன் ஒருவருக்காக மற்றொருவர் செயலாற்ற வேண்டும் என மனிதவுரிமைகள் சாசனத்தின் சரத்து 1 கூறுகின்றது (Universal Declaration of Human Rights, 2015). எல்லா மனிதர்களும் மனிதவுரிமைகள் சாசனத்தில் வரையறுக்கப்படும் உரிமைகளை அனுபவிப்பதற்கும், ஒன்றுகூடும் உணர்வுகளை வெளிப்படுத்தும், வாழும் அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளனர்.அரசுகளின் அரசியலமைப்பில் இவைகள் பிரதான விடயங்களாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பது அரசியல்யாப்புவாதத் தத்துவத்தின் எதிர்பார்ப்பாகும்.

எனவே, அரசாங்க நடவடிக்கையின் சட்டபூர்வத் தன்மையை நெறிப் படுத்தும் கோட்பாடு அரசியல்யாப்புவாதம் எனப் பொதுவாக வரையறுக் கலாம். இவ்வகையில், அரசாங்கத்தின் செயல்கள் சட்டபூர்வமானதாக உள்ளதா? மக்களுடன் தொடர்புடைய உத்தியோகபூர்வமான கடமை களைச் செய்வதற்கு முன்கூட்டித் தீர்மானித்த அல்லது நிர்ணயித்த சட்ட விதிகளை அரசாங்கம் பயன்படுத்துகின்றதா? என்பவைகளை அரசியல்யாப்புவாதம் பரிசோதிக்கின்றது எனக் கூறலாம். அரசாங்கத்தின் செயல்கள் முழுமையான உயர் சட்டத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். உயர்சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரம் மக்களுக்குரியதாகும். எழுதப்படாத அரசியலமைப்பைக் கொண்டுள்ள ஒரு சில அரசுகளைத் தவிர, உலகிலுள்ள ஏனைய அரசுகள் எழுதப்பட்ட அரசியலமைப்புக்களைக் கொண்டுள்ளன. இதன்பொருள் அரசுகள் அனைத்தும் அரசியல்யாப்புவாதத்தை நடைமுறைப்படுத்துகின்றன என்பதல்ல, பதிலாக அரசியலமைப்பைப் பின்பற்றுகின்றன என்பதே யாகும். உண்மையில் அரசியல்யாப்புவாதத்தை அரசுகள் பின்பற்ற வேண்டும். ஜனநாயக ஆட்சிமுறைமையின் பிரதான தூண் அரசியல் யாப்புவாதம் எனக் கூறலாம்.

### 3. அரசியல் பின்னணி

இலங்கையின் எட்டாவது (1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு நடை முறைக்கு வந்த காலத்திலிருந்து பதினைந்தாவது) பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் 2015 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது. இப்பாராளுமன்றத் தேர்தலில் தேசியக்கட்சிகள் கூட்டணி யமைத்துப் போட்டியிட்டிருந்தன. பெருமளவிற்குத் தேசியக் கட்சிகள் சிறிய கட்சிகளை அல்லது பிராந்தியக் கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணியை உருவாக்கியிருந்தன (பார்க்க பின்னிணைப்பு: 01). இப்பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி (UNFGG) 106 ஆசனங்களைப் பெற்று முன்னிலை வகித்தது. பிரதான போட்டிக் கட்சியாகிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) 95 ஆசனங்களைப் பெற்றிருந்தது. இலங்கை தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) 16 ஆசனங்களைப் பெற்றிருந்தது. எஞ்சிய எட்டு ஆசனங்களில் 06 ஆசனங்களை மக்கள் விடுதலை முன்னணியும் (JVP), 01 ஆசனத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் (EPDP), 01

ஆசனத்தை இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் (SLMC) பெற்றுக் கொண்டன. இதனைப் பின்வரும் அட்டவணை மேலும் எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை இல 01

**2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகளும் ஆசனங்களும்**

| அரசியல் கட்சிகள் | பெற்ற வாக்குகள் | % | மாவட்ட அடிப்படை யிலான ஆசனங்கள் | தேசியப் பட்டியல் மூலமான ஆசனங்கள | மொத்த ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி (UNFGG) | 5,098,916 | 45.66 | 93 | 13 | 106 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) | 4,732,664 | 42.38 | 83 | 12 | 95 |
| தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) | 515,963 | 4.62 | 14 | 2 | 16 |
| மக்கள் விடுதலை முன்னணி (JVP) | 543,944 | 4.87 | 4 | 2 | 6 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) | 44,193 | 0.40 | 1 | 0 | 1 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி (EPDP) | 33,481 | 0.30 | 1 | 0 | 1 |

ஆதாரம்: https://www.parliament.lk/en/election-2015/results

ஆயினும் அரசாங்கத்தினை அமைக்கக் கூடிய 113 என்ற பெரும் பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போன ஐக்கிய

தேசிய முன்னணியானது ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இரண்டு வருடங்கள் நிலைத்திருக்கக் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் 2015 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21 ஆம் திகதி கைச்சாத்திட்டுக் கொண்டது (News first,Online: 21 Aug, 2015, 8:54 PM). இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் காலாவதியானது. இதன்பின்னர் 2017 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது (Daily Mirror,Online: 31 December 2017, 11: 03 pm). இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை மக்களுக்கு நல்லாட்சியை வழங்கும் நோக்கில் இரண்டு வருடங்கள் நிலைத்திருக்கக் கூடிய தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்திருந்தது. இதனடிப் படையில் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. அத்துடன், அரசியலமைப்பிற்குச் செய்யப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தில் சரத்து 46 உபசரத்து (5) மூலம் "தேசிய அரசாங்கம்" என்பதற்கு வரைவிலக்கணமும் வகுக்கப்பட்டிருந்தது. இதன்படி, தேசிய அரசாங்க மென்பது "பாராளுமன்றத்தில் ஆகக் கூடிய ஆசனங்களைப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவும், பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவும் ஒன்று சேர்ந்து உருவாக்கப்படும் ஓர் அரசாங்கமே யாகும்" (பக்கம், 49) என விளக்கம் கொடுக்கப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கத்திற்கு அரசியலமைப்பு ரீதியான சட்டபூர்வத் தன்மையினை வழங்கியிருந்தது எனக் கூறலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், நல்லாட்சிக்கான தேசிய அரசாங்கத்தையும் விரும்பாத சில ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் "கூட்டு எதிரணி என்ற பெயரில்" சுயமாக இயங்கும் குழுவாகத் தம்மை அடையாளப்படுத்திப் பாராளு மன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் செயற்படத் தொடங்கினர். 2016 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கூட்டு எதிரணியில் 53 (53/225) பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர் (Manthri. lk: online). இவர்களே இலங்கை பொதுஜனமுன்னணி (The Sri Lanka People's Front) என்ற பெயரில் 2016 ஆம் ஆண்டு புதியதொரு அரசியல் கட்சியை உருவாக்கினர். இது சிங்கள மொழியில் இலங்கை பொதுஜன

பெரமுன என அழைக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் 231 உள்ளூராட்சிச் சபைகளை இலங்கை பொதுஜன பெரமுன கைப்பற்றிக் கொண்டது. மொத்த வாக்காளர்களில் 44.69 % (4,968,762) வாக்காளர்கள் (Results of Local Authorities Elections, Online: 2018) இக்கட்சிக்கு வாக்களித்திருந்தனர். இதனைப் பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை இல 02

2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள்

| கட்சி | வாக்குகள் | % | அங்கத்தவர்கள் |
|---|---|---|---|
| இலங்கை பொதுஜன பெரமுன | 4,968,762 | 44.69 | 3386 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,625,510 | 32.61 | 2393 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 989,821 | 8.90 | 674 |
| மக்கள் விடுதலை முன்னணி | 695,523 | 6.26 | 432 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | 498,139 | 4.48 | 362 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 339,675 | 3.06 | 407 |

ஆதாரம்: http://lgelections2018.dailymirror.lk/


ஆயினும் இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெறாததால் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியாகவே இதுவரையுள்ளது. இலங்கையின் அரசியல் கட்சிகளின் தரவரிசையில் மூன்றாவது பெரியதொரு கட்சியாக இலங்கை பொதுஜன பெரமுன தன்னைக் காட்சிப்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. இதுவரை காலமும் அதிகாரத்திற்கான போராட்டத்தில் கலந்து கொண்ட இரு பெரும் அரசியல் கட்சிகளுடன் சமமாகப் போட்டியிடும் வல்லமையுடன், புதியதொரு அரசியல் கட்சியாகத் தாமரை மொட்டுச் சின்னத்துடன் இவ் அரசியல் கட்சி அரசியல் களத்தில் தன்னை அரங்கப்படுத்தியது. இப்பின்னணியில் அரசியலமைப்பையும், அது கூறும் அடிப்படையுரிமைகள் சரத்துக் களையும் நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடிகளையும் அவதானிக்கவும், பகுப்பாய்வு செய்யவும் வேண்டும்.

தேசிய அரசாங்கம் ஒன்றிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017ஆம் ஆண்டு மார்கழி மாதம் காலாவதியானது. ஆனாலும், 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரை தேசிய அரசாங்கம் நடைமுறையிலிருந்தது. இதன்பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நல்லாட்சித் தேசிய அரசாங்

கத்திலிருந்து விலகிக் கொள்வதை உத்தியோக பூர்வமாக அறிவித்தது. இவ் அறிவித்தலானது சட்டரீதியானதாகும். இதன்மூலம் நடைமுறை யிலிருந்த நல்லாட்சித் தேசிய அரசாங்கம் முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் புதியதொரு அரசாங்கத்தை நிறுவ வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருந்தது. இப் பொறுப்பினை நிறைவேற்ற ஜனாதிபதி அரசியலமைப்பு ரீதியாக நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது அரசியலமைப்புக்குப் புறம்பான வழியில் ஜனாதிபதி செயற்பட்டிருந்தார். அரசியல் மோதல்களை அரசியல் களத்தில் தீர்க்கும் ஆற்றல், ஆளுமை இல்லாதபோது அதனை மறைக்கச் சட்டவாட்சித் தத்துவத்தையும், அடிப்படையுரிமை களையும் கருத்தில் கொள்ளாது அரசியலமைப்புக்கூடாகத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இது அரசியல்யாப்புவாத வன்முறையாக நோக்கப்பட்டது.

**4. அரசியலமைப்புப் பின்னணி**

ஜனாதிபதி 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2094/43 இன் ஊடாக, இலங்கையின் பிரதமமந்திரியாகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரசியலமைப்பின் சரத்து 42 உபசரத்து (4) இன் பிரகாரம் ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதே நாள் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2094/44 இன் ஊடாகப் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த இராஜபக்ஷ அவர்கள்



படம் இல:01

மஹிந்த இராஜபக்ஷ பிரதம மந்திரியாகப் பதவியேற்கும் நிகழ்வு

அரசியலமைப்பின் சரத்து 42 உபசரத்து (4) இன் பிரகாரம் ஜனாதிபதியால் பிரதம அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மூலஅரசியலமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியிருந்த அதிகாரங்களையும், 2010 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்குச் செய்யப்பட்ட பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்கியிருந்த உச்ச அதிகாரங்களையும் பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தம் இல்லாதொழித்தது. பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தம் நீக்கியிருந்த ஜனாதிபதி யின் அதிகாரங்களில் பிரதம மந்திரி தொடர்பாக இதுவரை ஜனாதிபதிக்கு இருந்து வந்த அதிகாரங்களும் உள்ளடங்கியுள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இவ்வகையில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சரத்து 42 உபசரத்து (4) பிரதம அமைச்சர் நியமனம் தொடர்பாகப் பின்வருமாறு கூறுகின்றது. “ஜனாதிபதி, அவரது கருத்துப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரைப் பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்” (பக்கம்: 46). இச்சரத்தில் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்ட பிரதம அமைச்சர் ஒருவரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குள்ளது என்பது தொடர்பாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. அரசியலமைப்பின் சரத்து 46 உபசரத்து (2) ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும் பிரதம அமைச்சரின் பதவிக் காலம் தொடர்பாகக் கூறுகின்றது, இதன் பிரகாரம் ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாலொழிய அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை தொடர்ந்தும் பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டும் (பக்கம்: 48). இச்சூழலைத் தவிர பதவியிலிருக்கும் பிரதம அமைச்சரை பதவியிலிருந்து நீக்குவதற்கு அரசியலமைப்பில் எவ்வித ஏற்பாடுகளும் சொல்லப்பட வில்லை. சரத்து 47 பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் அடுத்த தேர்தல் முடிவடையும் இடைப்பட்ட காலத்திற்கும் பிரதம அமைச்சரும், அமைச்சரவையும் தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும் எனக் கூறுகின்றது (பக்கங்கள்: 49-50). எனவே சரத்து 46 உபசரத்து (2) இற்கு மேலும் வலுவூட்டுவதாகவே சரத்து 47 உள்ளது எனக் கூறலாம். சரத்து 46 உபசரத்து (2) மற்றும் (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள

விடயங்களைச் சரத்து 47 உபசரத்து (1) மேலும் அழுத்திக் கூறுவதை அவதானிக்க முடியும். இதன் பிரகாரம் "பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும் 46 ஆம் உறுப்புரையின்(2) ஆம் பந்தியில் அல்லது (3) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக பதவி வகிக்காதொழிந்தாலன்றி அத்தகைய அமைச்சர்கள் தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும்..." (பக்கம்: 49). பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தம் பிரதம அமைச்சரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தை ஜனாதிபதியிடமிருந்து அகற்றிவிட்டது. சரத்து 47 உபசரத் துக்கள் (2) மற்றும் (3) மற்றும் சரத்து 48 உபசரத்து (1) பிரதம அமைச்சர் பதவி நீக்கம் தொடர்பாகக் கூறும் போது "...பிரதம அமைச்சர் இறந்தமை, பதவியிலிருந்து அகற்றப்பட்டமை அல்லது பதவி துறந்தமை..." போன்ற நிகழ்வுகள் தவிர்த்து தொடர்ந்து பணியாற்ற வேண்டும் (பக்கம்: 50) எனக் கூறுகின்றது. சரத்து 48 உபசரத்து (2) இன் பிரகாரம் பிரதம அமைச்சர் நியமனம் செய்யப்பட்ட பின்னர் அவரது பதவிக்காலம் தொடர்பான விடயத்தில் பாராளுமன்றம் தவிர்ந்த யாரும் தலையீடு செய்ய முடியாது. அதாவது பிரதம அமைச்சர் தனது பதவி நீக்கம் தொடர்பாகத் தானே சுயமாக முடிவு செய்யலாம் அல்லது அவரது பதவிக்காலம் தொடர்பில் பாராளுமன்றம் முடிவு செய்யலாம். சரத்து 42 உபசரத்து (4) ஜனாதிபதி தனது கருத்துப்படி பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ள வராக எவர் இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமிக்க வேண்டும். அதன் பின்னர் அந்த உறுப்பினர் தனது பிரதம அமைச்சர் பதவியைத் தொடர்ந்து பாதுகாப்பதற்குப் பாராளுமன்றத்தின் நம்பிக்கையினைத் தொடர்ந்தும் பேண வேண்டும். ஜனாதிபதியின் கருத்துப்படி பாராளுமன்றில் நம்பிக்கையைப் பெற்றவராக கருதும் பிரதம மந்திரி ஒருவர் சில வேளை பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற முடியாத நிலை உருவாகலாம். அத் தருணத்தில் பிரதம அமைச்சரைப் பதவி நீக்கும் / அகற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. இவ் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உரியதாகும்.

அரசியலமைப்பின் சரத்து 47 உபசரத்துக்கள் (2), (3) மற்றும் சரத்து 48 உபசரத்து (1) கூறும் "பதவியிலிருந்து அகற்றப்பட்டமை" என்பதை தீர்மானிக்கும் மற்றும் செயற்படுத்தும் அதிகாரம் பாராளு மன்றத்திற்கே உரியதாகும். அதாவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பிரதமமந்திரியைப் பதவி நீக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு

மட்டுமேயுள்ளது. பிரதமமந்திரி ஜனாதிபதியால் நியமனம் செய்யப் பட்டாலும், ஜனாதிபதியால் பிரதமமந்திரியைப் பதவி நீக்கம் செய்ய முடியாது. பிரதமமந்திரி பாராளுமன்றத்திற்கே பொறுப்புக் கூறவேண்டும். ஜனாதிபதிக்கு அல்ல. எனவே 2094/43 இலக்க வர்த்தமானப் பத்திரிகை யில் குறிப்பிட்டுள்ளது போன்று ரணில் விக்கிரமசிங்க அவர்களை பிரதம அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்கிய செயல் நிறைவேற்றுத்துறை தனது அதிகார வரம்பை மீறித் தன்னிச்சையாகச் சட்டத்துறை மீது தலையீடு செய்து அரசியலமைப்பை சிதைத்த செயலாகியது. இதனை வலுவேறாக்கத் தத்துவத்தினையும், சட்டவாட்சித் தத்துவத்தையும் ஜனாதிபதி சிதைத்த செயல் எனவும் கூறலாம். இதன்மூலம் அரசியலமைப்பைப் பயன்படுத்தி ஜனாதிபதி சர்வாதிகாரி யாகின்ற அரசியல்காட்சிநிலை தோன்றியது. இதனால் மிகவும் குழப்பமானதும், அரசியல் உறுதியற்றதுமான நிலை இலங்கையில் உருவாகியது.

மகிந்த இராஜபக்ஷவுடன் கூட்டிணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சித் தேசிய அரசாங்கத்தை அரசியல் சூழ்சியால் (Political Maneuver) கவிழ்த்து ஆட்சிமாற்றத்தை உருவாக்கியமைக்கான நியாயங்களை 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் மூலம் பின்வருமாறு தெளிவு படுத்தினார். "ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் அடிப் படையில் வேறுபாடுகள் காணப்பட்டன. ரணில் விக்கிரமசிங்க பிடிவாதமான தீர்மானங்களை நிறைவேற்றினார். இது அரசியல் யாப்பு நெருக்கடிகளை உருவாக்கியது. கடந்த மூன்று வருடங்கள் மற்றும் ஆறு மாதங்களாக (3-1/2) எனக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கொள்கை வேறுபாடுகள் இருந்தன. கொள்கை வேறுபாடு களுக்கு அப்பால் கலாசார வேறுபாடுகளும் இருந்தன. கொள்கை, கலாசாரம், ஆளுமை வேறுபாடுகள் எல்லாம் ஒன்றிணைந்தே அரசியல், பொருளாதார நெருக்கடிகளை மேலும் மோசமாக்கியதாக நான் நம்புகின்றேன்… மத்திய வங்கியில் நிகழ்ந்த கொள்ளை பொருளாதார நெருக்கடிகளை மேலும் ஆழமாக்கியது. இதிலிருந்து நாடு விடுபடுவது மிகவும் கடினமானதாகும்… அண்மையில் நாமல் குமார (Namal Kumara) என்பவர் தொடர்பு சாதனங்களுக்குக் கொடுத்த நேரடித் தகவலில் என்னையும், கோட்டாபாய இராஜபக்ஷவையும் கொலை செய்வதற்குச் சதி நடைபெறுவதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து

இது தொடர்பாக விசாரிக்கும்படி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் பணித்தேன். அவர்கள் மிகவும் ஆபத்தான நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவித்தனர். எனவே ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைக் கவிழ்த்து அதனை மகிந்த இராஜபக்ஷவிடம் கையளித்தேன்" (http://www.president.gov.lk/ : 28.10.2018 ) எனத் தெரிவித்திருந்தார்.

பிரதம மந்திரிப் பதவியிலிருந்து தான் நீக்கப்பட்டமை அரசியலமைப்பு விதிகளுக்கு முரணானது என்று தெரிவித்து ரணில் விக்கிரமசிங்க பதவி விலக மறுத்ததுடன் அலரிமாளிகையை விட்டு வெளியேறவும் மறுப்புத் தெரிவித்தார். அத்துடன், நானே பிரதம மந்திரி எனப் பத்திரிகையாளர் மாநாட்டை நடாத்தி அறிவித்ததுடன், அரசியலமைப்பு ரீதியாகத் தனக்கு விடுக்கப்பட்டிருக்கும் இச்சவாலை ஏற்றுச் செயற்படுவதற்குத் தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதேநேரம் புதிதாகப் பிரதம அமைச்சராகப் பதவியேற்ற மகிந்த இராஜபக்ஷ அரசியலமைப்பின் சரத்துக்கள் 43, 44 மற்றும் 45 இன் பிரகாரம் தனக்கான அமைச்சரவையினை ஜனாதிபதியின் மூலம் நியமனம் செய்து தானே பிரதம அமைச்சர் என மக்களுக்கு அறிவித்தார். இதன் மூலம் ஒரு நாடு இரண்டு பிரதம அமைச்சர்கள் என்ற அதிகாரப் போராட்ட அரசியல் காட்சிநிலையொன்று இலங்கையில் உருவாகியது. இரு தரப்பும் நாட்டை ஆளும் அதிகாரம் தம்மிடமேயுள்ளது என உரிமை கோரினர். பரஸ்பரம் கடுமையான வார்த்தைகளால் மோதிக் கொண்டனர்.

### 5. பாராளுமன்ற ஒத்திவைப்பும், கலைப்பும்

இரண்டு பிரதம அமைச்சர்களுக்கும் இடையிலான அதிகாரப் போராட்டத்திற்கும், இழுபறி நிலைக்கும் மத்தியில் 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2094/45 இன் பிரகாரம் அரசியலமைப்பின் சரத்து 70 உபசரத்து (3) இல் ஜனாதிபதிக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டும், 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுகின்றது என்றும், 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு அடுத்த கூட்டத் தொடரை ஆரம்பிப்பதற்காகப் பாராளுமன்றத்தில்

கூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பல சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கூட்டி இவ் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு ஜனாதிபதிக்கு அழைப்புவிடுத்திருந்தனர்.

இந்நிலையில் இருதரப்பும் பாராளுமன்றத்தில் தமக்கு 113 ஆசனங்கள் பெரும்பான்மை இருப்பதை நிரூபிப்பதற்கு கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டன. பாராளுமன்ற அங்கத்தவர்களின் கட்சிக் குறுக்கெதிர் மாற்றத்திற்காக (Crossed Over) பல மில்லியன் ரூபாக்கள் பேரம்பேசப்பட்டன. அரசியல்காட்சி நிலையின் தந்திரோபாய நகர்வினைச் சரியாகக் கணிக்கும் திறன் மற்றும் ஆற்றல் இல்லாத சில பாராளுமன்ற அங்கத்தவர்கள் இப்பேரம் பேசும் வலையில் வீழ்ந்தனர். இதைத்தவிர பாராளுமன்றத்திற்கு வெளியில் தமக்கு இருக்கும் மக்கள் ஆதரவை நிரூபிப்பதற்கும் இரு தரப்பும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டன. இவைகள் இரண்டும் மிகவும் சுவாரஸ்யமான அரசியல் காட்சிகளை இலங்கையர்கள் மத்தியில் பதிவு செய்து விலகிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

எதிர்க்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் (TNA) ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும் இருதரப்பும் அதீத பிரயத்தனத்தை மேற் கொண்டன. 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30 ஆம் திகதி சபாநாயகர் கருஜெயசூரிய பாராளுமன்ற அங்கத்தவர்களின் கௌரவத்தைப் பாதுகாக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். இக் கடிதத்தில் "ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் 125 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு பாராளுமன்றப் பெரும்பான்மையினை நிரூபித்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர். இக் கோரிக்கைக்கு செவிசாய்ப்பது தன்னுடைய கடமையாகும். எனவே ஜனாதிபதி பாராளுமன்றத்தை உடன் கூட்ட வேண்டும்" (Daily Mirror, Online: 2018.10.30 : 12:38:42) எனக் கேட்டிருந்தார். இதனடிப்படையில் ஜனாதி பதிக்கும் சபாநாயகருக்கும் இடையில் ஐப்பசி மாதம் 31 ஆம் திகதி சந்திப்பு நடைபெற்றது. இதன்போது மிக விரைவில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அழைப்பினைத் தான் வெளியிடுவதாக ஜனாதிபதி சபாநாயகருக்கு உறுதியளித்திருந்தார். இதற்கிணங்க 2018 ஆம் ஆண்டு

கார்த்திகை மாதம் 04 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2095/50 இன் மூலம் அரசியலமைப்பின் சரத்து 70 உபசரத்து (3) பந்தி (i) இன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

அதேநேரம் 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 07 ஆம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர்களின் உத்தியோகப்பற்றற்ற கூட்டத்தின் பின்னர் நிலையியல் கட்டளைச் சட்டத்தை இடைநிறுத்தவும், அதன் மூலம் உறுதியான அரசாங்கத்தை நிறுவவும் சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் சபாநாயகர் தெரிவித்தார். இத்தீர்மானம் பிரதம மந்திரி மீது ஜனாதிபதி கொண்டிருந்த வெறுப்பினை மேலும் அதிகரிக்கக் காரணமாகியதுடன் அடுத்து வந்த சில தினங்களில் ஜனாதிபதி நல்லாட்சி அரசாங்கம் தொடர்பான இறுக்கமான தீர்மானங்களை எடுத்து நிறைவேற்றவும் காரணமாக அமைந்தது எனக் கூறலாம்.

பாராளுமன்றத்திற்கு வெளியில் அதிகாரத்திற்கான போராட்டத்தில் வெற்றியடைய முடியாது என்பதை உணர்ந்த ஜனாதிபதி, பாராளு மன்றத்தைக் கூட்டுவதன் மூலம் அதிகாரப் போராட்டத்தில் வெற்றி யடையலாம் என்பதிலும் அவநம்பிக்கை கொண்டிருந்தார். இவ் அவநம்பிக்கையினால் 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2096/70 மூலம் ஜனாதிபதியால் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது. இப்பிரகடனத்தில் "நள்ளிரவு முதல் நடைமுறைக்குவருமாறு பாராளு மன்றத்தைக் கலைப்பதுடன், புதிய பாராளுமன்றத்தை இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு ஜனவரி மாதம் பதினேழாம் திகதி கூட்டுமாறு அழைக்கின்றேன்..." எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதற்காக அரசியலமைப்பின் சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ), மற்றும் சரத்து 62 உபசரத்து (2), சரத்து 70 உபசரத்து (5) ஆகியன பயன்படுத்தப்பட்டன. அத்துடன் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானப் பிரகடனம் கூறியது. பாராளுமன்றத்தை ஜனாதிபதி உரிய காலத்திற்கு முன்னர் கலைத்தமை இலங்கையின் அரசியலமைப்பைப் புரிதல், வியாக்கியானப்படுத்தல், உரியமுறையில் அமுல்படுத்தல்

தொடர்பான அரசியலமைப்பு நெருக்கடிகளை முன்னெப்போதும் இல்லாதளவிற்கு தேசியளவில் உருவாக்கியது எனலாம்.

மக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்கின்ற உயர்ந்த ஆவணம் அரசியலமைப்பு எனலாம். தனிநபர் களுக்கிடையிலான அரசியல் அபிலாசைகள் அல்லது நலன்களை அல்லது ஆளுமைகளை நியாயப்படுத்த அரசியலமைப்பினையும், மக்களின் அடிப்படையுரிமைகளையும் மீறுவது சர்வாதிகார அரசியல் கலாசாரத்தின் உருவாக்கமாகவே கருதமுடியும். தனிநபர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் வெறுப்பினை நியாயப்படுத்த அரசியல மைப்பைப் பயன்படுத்துகின்றனர். ஆயினும், இது நாட்டிலுள்ள அடிப் படைச் சட்டமாகிய அரசியலமைப்பை மீறுவதன் மூலமும், மக்கள் இறைமையினை மீறுவதன் மூலமும் எதேச்சதிகார அரசியல் கலாசாரத்தை நிறுவ முயற்சிப்பதாக காட்சியளித்தது. அரசியலமைப்பையும், அடிப் படையுரிமைகளையும் மீறி யார் ஆட்சிசெய்கின்றார்களோ அவர்கள் அரசியல்யாப்புவாதம் கூறும் சட்டவாட்சியை மீறிய குற்றத்திற்குள்ளா கின்றனர். அத்துடன் தமது அரசியல் எதிரிகளைத் தமது இராஜதந்திர பலத்தினால் அல்லது மக்கள் பலத்தினால் வெற்றி கொள்ள முடியாத சாணக்கியமற்றவர்களாகின்றனர். இவர்கள் மக்களால் தேர்தல் களத்தில் தோற்கடிக்கப்பட வேண்டியவர்களாகும்.

### 6. அடிப்படையுரிமை மீறல் முறைப்பாடுகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் சரத்துக்கள் 126,35 மற்றும் 17 கூறும் அடிப்படையுரிமை ஏற்பாடுகளின் கீழ் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக வெளியிட்ட வர்த்தமானப் பத்திரிகைப் பிரகடனம் அரசியலமைப்பிற்கு முரணானது. எனவே அதனை இரத்துச் செய்யுமாறு கோரி பத்து (10) அடிப்படை யுரிமை மீறல் முறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டன. இம் முறைப்பாடுகள் தொடர்பான வாய்மொழி மூலமான கருத்துக்களைப் பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம், இம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணையினைத் தொடர்ந்து நடாத்தப் போவதாக அறிவித்துக் குறித்த வர்த்தமானப் பத்திரிகைப் பிரகடனத்திற்கு 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி செவ்வாய்கிழமை இடைக்காலத் தடையுத்தரவினைப் பிறப்பித்து தீர்ப்பு வழங்கியதுடன்,

முறைப்பாட்டாளர்களின் விண்ணப்பங்கள் 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும், தனது இறுதித் தீர்ப்பினை 2018 ஆண்டு மார்கழி மாதம் 07 ஆம் திகதி வழங்குவதாகவும் உயர்நீதிமன்றம் அறிவித்தது.

வர்த்தமானப் பத்திரிகைப் பிரகடனத்திற்கு எதிரான அடிப்படையுரிமை மீறல் முறைப்பாடுகளுக்கு எதிராக ஐந்து (5) இடையீட்டு முறைப் பாடுகள் தாக்கல் செய்யப்பட்டன. முதல் முறைப்பாட்டை பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தாக்கல் செய்திருந்தார். இவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன (Sanjeeva Jayawardena) ஆஜராகி யிருந்தார். இவர் தனது வாதத்தில் "அரசியலமைப்பின் சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ), சரத்து 70யும் இணைத்து அரசியலமைப்பு விவகாரங்களைக் கையாள வேண்டும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் இது இரண்டிற்கும் எவ்வித தொடர்புமில்லை. அரசியலமைப்பின் மொழிப் பிரயோகங்களில் சில தவறுகள் உள்ளன. சிங்கள, ஆங்கில மொழி பெயர்ப்புகளுக்கிடையில் தவறு ஏற்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. அதேபோல சரத்து 62 உபசரத்து (2) இற்கு அமைவாகப் பாராளுமன்றம் கலைக்கப்படாதவிடத்து ஐந்து வருடங்களுக்குப் பாராளுமன்றம் இயங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சரத்து 32 உபசரத்து (2) பந்தி (இ) பிரகாரம் முன்னைய பாராளுமன்றம் முழுமையாக இயங்காத நிலையில் தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. சரத்து 32 உபசரத்து (2) பந்தி (இ) ஆனது ஓர் இணைப்புச் சரத்தாக வேயுள்ளது. ஆனால் சரத்து 62 உபசரத்து (2) ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களைப் பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் வரையறை செய்யவில்லை. அதனை மாற்றுவதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்" (Colombo Telegraph, Online: 2018.12.06) என வாதிட்டார். இதேபோன்று ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன (Marapana) தனது வாதத்தில், "...சரத்து 66 உபசரத்து (2) ஆனது ஐந்து வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் எனக் கூறுகின்றது. பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலமே இவ்வாறான நிலை ஏற்பட்டது. எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சரத்து 70 உபசரத்து (3) இன் பிரகாரம் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் நிலையில் பாராளுமன்றம் மூலமாக

பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாத நிலை ஏற்படும். இதனால் ஜனாதிபதி வர்த்தமானப் பத்திரிகை மூலமாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்" (Daily News, Online: Friday, 2018.12.07, 01.04 ) என வாதிட்டார்.

இவர்களுடைய வாதத்தைவிட சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரியா (Jayantha Jayasuriya) அவர்களின் வாதம் அரசியல்யாப்புவாதம் கூறும் நீதிபரிபாலனச் சுதந்திரம் மற்றும் அதன் தகைமை, சட்டவாட்சித் தத்துவம், வலுவேறாக்கத் தத்துவம் போன்றவற்றிற்கு எதிரானதாவே அமைந்தது. இவர் தனது வாதத்தில் "ஜனாதிபதி நிறைவேற்றுத்துறையின் தலைவர், அரசின் தலைவர் மற்றும் அரசாங்கத்தின் தலைவர், அரசியலமைப்பின் சரத்து 126 இன் பிரகாரம் அடிப்படையுரிமைகளுக்கு ஊடாக ஜனாதிபதியுடன் உயர்நீதிமன்றம் விவாதிக்க முடியாது. ஜனாதிபதி அரசியலமைப்புச் சார்ந்த கடமைகளைப் புரியும் போது சரத்து 126 இன் பிரகாரம் அவருடன் மோதமுடியாது. ஜனாதிபதியின் கடமைகள் மற்றும் அதிகாரங்களை நிறைவேற்றுத்துறை சார்ந்த செயற்பாடு, நிர்வாகம் சார்ந்த செயற்பாடு (Executive and Administrative Action) என வகைப்படுத்த முடியாது. அடிப்படையுரிமை மீறல் முறைப்பாட்டில் வேண்டுமென்றே அரசியலமைப்பை ஜனாதிபதி மீறினார் என்றும், ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்றும் குற்றம் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சபாநாயகர் உயர் நீதிமன்றத்தில் சுமத்தலாம். இது தொடர்பாக உயர்நீதிமன்றம் விசாரணை செய்து தீர்ப்பினைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும் என சரத்து 38 கூறுகின்றது. சட்டத்துறையின் பணியினை செய்யும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு கிடையாது. இது தொடர்பான பொறிமுறை சரத்து 38 இல் கூறப்பட்டுள்ளது. இது பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். உயர்நீதிமன்றத்தின் பொதுவான நீதி பரிபாலனம் தொடர்பாக சரத்து 118 கூறுகின்றது. ஜனாதிபதியினால் அரசியலமைப்பு மீறப்பட்டமையுடன் தொடர்புடைய விசாரணைகள் தொடர்பான விசேட பொறிமுறைகள் தொடர்பாகச் சரத்து 38 கூறுகின்றது. ஜனாதிபதியை அரசியலமைப்பு பாதுகாத்து உறுதிப்படுத்தியுள்ளது. அவர் தனது கடமைகளைச் செய்வதற்கான பாதுகாப்பையும் அரசியலமைப்பு வழங்கியுள்ளது. ஜனாதிபதிக்குரிய பாதுகாப்பைப் பாதுகாக்கத் தவறும் போது அவர் தனது உத்தியோகக் கடமைகளைப் செய்வது பாதிக்கப்படும். எனவே உயர்நீதிமன்றம் ஜனாதிபதிக்கு எதிரான

முறைப்பாடுகளை நிராகரிக்க வேண்டும். சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) வின் பிரகாரம் பாராளுமன்றத்தைக் கூட்டும், அமர்வை நிறுத்தும், கலைக்கும் அதிகாரங்கள் ஜனாதிபதிக்குள்ளது. மக்களின் வாக்களிக்கும் உரிமையினைப் பிரயோகித்தும், அரசியலமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தியும் ஜனாதிபதி பிரகடனத்தை வெளி யிட்டுள்ளார்" (Onlanka, Online:2018.12.06) எனத் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றத்தின் சுயாதீன நீதிபரிபாலனத் தகைமை தொடர் பாகவும், வலுவேறாக்கம் மற்றும் சமநிலைத்தலையீடு தொடர்பாகவும் நேர்எதிரான கருத்தினையுருவாக்கிச் சட்டவாட்சித் தத்துவத்தையும், அரசியல்யாப்புவாதத்தையும் சட்டமாதிபர் திசைமாற்றியிருந்தார் எனக் கூறலாம். அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இலங்கையில் சட்டவாட்சியை நிறுவும் நோக்கில் ஏ.வி. டைசியின் சட்டவாட்சித் தத்துவத்தை உள்வாங்கி அரசியலமைப்பில் சரத்து 12 உபசரத்து (1) ஐ உருவாக்கியுள்ளனர். இச்சரத்து "சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள். அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப் படுவதற்கு உரிமையுடையவர்கள்" எனக் கூறுகின்றது. சட்டவாட்சித் தத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இச்சரத்து அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது எனத் துணிந்து கூறலாம். சட்டவாட்சி தொடர்பாக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வணசுந்தர (Wanasundera) 1984 ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பு ஒன்றில் "இந்திய அரசியலமைப்பின் சரத்து 14 இன் உள்ளடக்கங்களுக்கு ஒத்ததாக எமது அரசியலமைப்பின் சரத்து 12 உள்ளது. அமெரிக்காவின் அரசியலமைப்பிற்குச் செய்யப்பட்ட 14ஆவது திருத்தத்தின் மூலம் பெறப்பட்ட சமத்துவப் பாதுகாப்பு விதிகள் மற்றும் சட்டவாட்சிக் கோட்பாட்டினாலான ஆங்கிலச் சட்டம் என்பவை களை ஒன்றிணைத்து இந்திய அரசியலமைப்பின் சரத்து 14 உருவாக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர் நீதிமன்றம் கூறியது. ஆங்கில அரசியலமைப்பின் அடிப்படைத்தத்துவம் சட்டவாட்சி என்பதை நாம் அறிவோம். அரசின் எந்தவொரு துறையின் செயல்களையும் சட்டவாட்சித் தத்துவத்தினடிப்படையில் கேள்விக்குள்ளாக்கலாம். அவ்வாறாயின் அதற்குரிய நியாயங்களை கோருவது சட்டபூர்வமானதாகும். இது சட்டத்துறைக்குரியது மட்டுமல்ல அரசினுடைய ஒவ்வொரு துறைக்கும் பொருத்தமானதாகும். இவ் எண்ணக்கரு சரத்து 12 இலும் உள்ளடக்கப் பட்டுள்ளது" (Supreme Court: 2018.12.13, P.86) என விளக்கமளித்திருந்தார். ஜனநாயக நாடு ஒன்றில் "சட்டமே உயர்ந்தது"

என்பதை உயர்நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு தெளிவுபடுத்தியுள்ளது. அரசியல்யாப்புவாதத்திற்கு ஏற்ப "சட்டத்திற்கு எல்லோரும் கட்டுப்பட வேண்டும்". சட்டத்தை விட மேலானவர்கள் அரசியல்யாப்புவாதம் எதிர்பார்க்கும் ஜனநாயக சமுதாயத்தில் இருக்கமுடியாது என்பதை இவ்விளக்கம் நிறுவியுள்ளது எனக் கூறமுடியும்.

அரசியலமைப்பிற்குச் செய்யப்பட்ட பத்தொன்பதாவது திருத்தத்தில் ஏற்கனவே இருந்த சரத்து 33 இனை முழுமையாக நீக்கி விட்டு அதற்குப் பதிலாக புதிய சரத்தினால் 33ஆவது சரத்து மாற்றீடு செய்யப் பட்டுள்ளது. இப் புதிய 33ஆவது சரத்தில் இரண்டு உபசரத்துக்கள் உள்ளன. இவ் இரண்டு உபசரத்துக்களும் ஜனாதிபதியின் கடமை களையும், தத்துவங்களையும் எடுத்துக் கூறுகின்றன. மாற்றீடு செய்யப் பட்ட சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) "பாராளுமன்றத்தைக் கூட்டுதல், அமர்வை நிறுத்துதல், கலைத்தல்" அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. அதேநேரம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் தொடர்பாக பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் சரத்து 62 உபசரத்து (2) பின்வருமாறு விபரிக்கின்றது. "பாராளுமன்றமானது முன்னதாக கலைக்கப்பட்டாலொழிய ஒவ்வொரு பாராளுமன்றமும் அதன் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கொண்ட காலத்திற்குத் தொடர்ந் திருத்தல் வேண்டும். அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அல்ல. அத்துடன் சொல்லப்பட்ட ஐந்தாண்டு காலம் முடிவடைந்தால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாகச் செயற்படுதல் வேண்டும்" (பக்கம்: 61). சரத்து 62 உபசரத்து (2) விபரிக்கும் விடயங்களைக் கருத்திலெடுத்தே சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள அதிகாரங் களைப் பிரயோகிக்க வேண்டும். சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) கூறும் ஜனாதிபதியின் அதிகாரங்களை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பாகக் கூறும் சரத்தாகவே சரத்து 70 ஐப் பொருள் கொள்ள வேண்டும். சரத்து 70 உபசரத்து (1) முதலாம் பந்தி பாராளுமன்றம் தொடர்பாக ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தைப் பின்வருமாறு விபரிக்கின்றது. "ஜனாதிபதி, பிரகடனத்தின் மூலம், பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம், அமர்வு நிறுத்தலாம் அத்துடன் கலைக்கலாம்" (பக்கம்: 66). அதேநேரம் சரத்து 70 உபசரத்து (1) இரண்டாம் பந்தி "ஆயினும், ஜனாதிபதி பாராளுமன்றம் முதல் கூட்டத்திற்காக நியமித்த திகதியிலிருந்து நான்கு ஆண்டுகள் ஆறு

மாதங்களுக்கு குறையாத ஒரு காலப்பகுதி முடிவுறும் வரை, பாராளு மன்றத்தின் மொத்த எண்ணிக்கையின் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டுக்குக் குறையாத உறுப்பினர்களால் அதன் சார்பில் வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றினால் அங்ஙனம் செய்யுமாறு பாராளுமன்றம் ஜனாதிபதியை வேண்டினாலொழிய அதனைக் கலைத்தலாகாது" (பக்கம்: 66) எனக் கூறுகின்றது.

அரசியலமைப்பின் சரத்து 70 உபசரத்து (1), சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) யுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்:

1. சரத்து 70 உபசரத்து (1), சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) யை நிராகரிக்கவில்லை.

2. சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) எவ்வாறு செயற்படுத்தப்படும் என்பதை சரத்து 70 உபசரத்து (1) இரண்டாம் பந்தி கூறுகின்றது. இதன்படி 4-1/2 வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி பாராளு மன்றத்தைத் தன்னிச்சையாகக் கலைக்க முடியாது.

3. 4-1/2 வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமாயின் அதனை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

4. இத் தீர்மானத்தைப் பாராளுமன்றம் 2/3 பெரும்பான்மையால் (150/225) நிறைவேற்றுதல் வேண்டும். இத் தீர்மானத்தின் அடிப்படையில் பாராளுமன்றம் ஜனாதிபதியை வேண்டுதல் அல்லது கோருதல் வேண்டும். அதன் பின்னர் ஜனாதிபதி பாராளு மன்றத்தைக் கலைக்க அதிகாரமுடையவராகின்றார்.

ஆகவே பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பாராளுமன்றமே ஜனாதிபதிக்கு வழங்க வேண்டும். அதன்பின்னரே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். பாராளுமன்றம் தொடர்பாக ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள் யாவும் தனிச் சரத்துக்களுடன் தொடர்புடையதல்ல. பதிலாக சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) சரத்து 62 உபசரத்து (2), சரத்து 70 உபசரத்து (1) இரண்டாம் பந்தி ஆகிய அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தே பொருள் கொள்ள வேண்டும். அரசியலமைப்பை முழுமையானதொரு சட்டமாகக் கருதி அதனூடாகவே ஜனாதிபதிக்கு பாராளுமன்றம் தொடர்பாக இருக்கும் அதிகாரங்களைப் பொருள் கொள்ள வேண்டும்.

அடிப்படையுரிமை மீறல் முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் பின்வருமாறு தமது விவாதத்தை முன்வைத்தனர். ஜனாதிபதி சட்டத்தரணி கனக்.ஈஸ்வரன் (Kanag- Iswaran) "அரசியலமைப்பைப் பாதுகாப்பதே ஜனாதிபதி ஒருவரின் பிரதான கடமையாகும். அரசியலமைப்பிற்குட்பட்டே அவர் தனது கடமைகளைச் செய்ய வேண்டும். அரசியலமைப்பின் சரத்து 70 உபசரத்து (1) இன் பிரகாரம் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும், பாராளுமன்றம் நான்கு வருடங்கள் ஆறுமாதங்கள் செயற்பட்ட பின்னரே கலைக்க முடியும் அல்லது 2/3 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கமுடியும். இதில் எதனையும் கருத்தில் கொள்ளாது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.எனவே இது அரசியலமைப்பை முழுமையாக மீறிய செயலாகும்." (Daily News, Online: Wednesday, 2018.12.05, 01:00) எனத் தெரிவித்தார். இதேபோன்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் (M.A. Sumanthiran) "அரசியலமைப்பின் சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) யினை சரத்து 70 உபசரத்து (1) முதலாம் பந்தியையும் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும் என வாதிடுவது மிகவும் அபாயகரமான செயலாக அமையும். எந்த அடிப் படையிலும் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. பத்தொன்பதாவது திருத்தத்தின் பின்னர் அது சாத்தியமான விடயமல்ல. ஆங்கில சிங்கள மொழி பெயர்ப்புகளுக்கிடையில் பல முரண்பாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் சட்டம் சிங்களத்தில் மட்டும் வரையப்படவில்லை. தமிழ், சிங்கள மொழியில் இருக்கும் அரசியலமைப்பை நோக்குவதன் மூலம் சரியான தீர்ப்பினைப் பெறமுடியும். இந்நிலையில் முழுமையாக அரசியலமைப்பை ஆராயாமல் பாராளுமன்றத்தைக் கலைப்பது அரசியலமைப்பை மிக மோசமாக மீறும் செயலாகவே அமைந்துள்ளது" (Daily Mirror,Online: 2018.12.10,00:02:13) எனத் தெரிவித்தார். ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன (Thilak Marapana) தனது வாதத்தில் "பாராளுமன்றத்தைக் கலைப்பது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில் கூறப்படவில்லை. அரசியலமைப்பின் சரத்து 70 உபசரத்து (1) இன் பிரகாரம் 4-1/2 வருடங்களுக்கு முன்னர் பாராளு மன்றத்தைக் கலைப்பதாக இருந்தால் பாராளுமன்றத்தில் 2/3

பெரும்பான்மையைப் பெற வேண்டும். அந்தப் பெரும்பான்மையுடன் யோசனையை முன்வைத்து பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்" (Daily News,Online: Friday, 2018.12.07, 01:04) எனத் தெரிவித்தார். ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜெயம்பதி விக்ரமரட்ண (Dr Jayampathy Wickramaratne) தனது வாதத்தில் "அரசியலமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான சந்தர்ப்பம் ஜனாதிபதிக்கு வழங்கப்படவில்லை. பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஏற்கனவே இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அந்த நிலையில் சட்டங்களில் எமது சொந்த விடயங்களை உட்புகுத்த முடியாது. நாம் சட்டங்களை நியாயப்படுத்துவதற்காக முன்னிற்க வேண்டிய தேவையுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்திருந்த விடயம் அரசியலமைப்பு விதிக்கு உட்பட்டதல்ல" (Daily Mirror,Online: 2018.12.10, 00:02:13) எனத் தெரிவித்தார். ஜனாதிபதி சட்டத்தரணி விரான் கொரியா (Viran Corea) தனது வாதத்தில் "சட்டமாதிபர் திணைக்களம் அரசியலமைப்பின் சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) பிரிவை ஏனைய சரத்துக்கள் கட்டுப்படுத்தவில்லையென கூறுவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தை அர்த்தமற்றதாக்கி நிராகரிப்பதுடன், சட்டவாட்சியையும் சீர்குலைக்கும் வகையில் அமைந்திருக்கின்றது. சரத்துக்களைத் தனியாக நோக்காமல் தொகுப்பாகவே நோக்க வேண்டும்" (Daily Mirror,Online: 2018.12.10, 00:02:13) எனத் தெரிவித்தார். எனவே சரத்து 33 உபசரத்து (2) பிரிவு (இ) மற்றும் சரத்து 62 உபசரத்து (2) ஆகியன சரத்து 70 உபசரத்து (1) இரண்டாம் பந்தியினால் முழுமையாக வழிநடாத்தப்படுகிறது. இதன் மூலம் சரத்து 70 உபசரத்து (1) இரண்டாம் பந்தி மூலம் வலுவாகி விடுவதுடன், பாராளுமன்றத்தைக் கலைத்தல் தொடர்பான செயல்முறைகளையும் தெளிவாகக் கூறுகின்றது. எனவே சரத்து 33 உபசரத்து (2) பிரிவு (இ) மற்றும் சரத்து 62 உபசரத்து (2) ஆகியவற்றையும் சரத்து 70 உபசரத்து (1) இரண்டாம் பந்தியுடன் தொடர்புபடுத்தித் தொகுப்பாகவே பார்க்க வேண்டும். எனவே பத்தொன்பதாவது அரசியலமைப்பின் பிரகாரம் இரு சந்தர்ப்பங்களில் மாத்திரமே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

1. பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வக் காலம் ஆரம்பிக்கப்பட்டு நான்கரை (4-1/2) வருடங்களின் பின்னர் ஜனாதிபதி பாராளுமன்றத் தினைக் கலைக்க முடியும்.


2. பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றி ஜனாதிபதியிடம் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு வேண்டும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்.

**6. இடைக்கால தடையுத்தரவும், பாராளுமன்றக் கூட்டத்தொடரும்**

2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி உயர்நீதிமன்றம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக இடைக்காலத் தடையுத் தரவு விதித்தது. இது 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 04 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2095/50 இன் பிரகாரம் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை மீண்டும் வலுவானதாக்கியதுடன், அதன் சட்டரீதியான செல்லுபடியாகும் தன்மையினையும் ஏற்றுக்கொண்டிருந்தது. வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 2095/50 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி காலை பாராளுமன்றம் கூடியது. இப்பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிலையியற் கட்டளைச் சட்டத்தின் சரத்து 135 இன் பிரகாரம் அன்று மட்டும் நடைமுறையில் இருக்கும் வகையில் நிலையியற் கட்டளைச் சட்டத்தை தளர்த்தும் அல்லது இடைநிறுத்தும் பிரேரணையொன்றை சபையில் முன்மொழிந்தார் (Ada Derana, Online: 2018.11.14,12:10 PM).

நிலையியல் கட்டளைச் சட்டம் இலக்கம் 135 இன் பிரகாரம் எந்தவொரு பாராளுமன்ற கூட்டத்திற்குமான உறுப்பினர் பெரும்பான்மை யாகவுள்ளனர் (Quorum) என அறிவிக்கப்பட்ட பின்னர், நிறைவேற்றப் படவுள்ள அல்லது விவாதிக்கப்பட வேண்டிய சிறப்புக் கடமைகளைச் செயற்படுத்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிலையியல் கட்டளைச் சட்ட விதிகளை இடைநிறுத்தலாம். அமைச்சரவை அந்தஸ்தில்லாத பாராளுமன்ற உறுப்பினரால் இதற்கான முன்மொழிவு முன்வைக்கப் படலாம். பாராளுமன்றத்தின் இருபதுக்கும் குறைவில்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தகைய முன்மொழிவுக்கு ஆதரவாக வாக்களித்தால்

நிலையியல் கட்டளைச் சட்டங்களை இடைநிறுத்தலாம் (பக்கம்:64). நிலையியல் கட்டளைச் சட்டங்களை இடைநிறுத்தும் முன்மொழிவு சபையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இதற்கு சபையில் குரல் மூலமான அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்ததுடன், நிலையியற் கட்டளைச் சட்டம் தளர்த்தப்பட்டதாகச் சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பிரதம மந்திரி மகிந்த இராஜபக்ஷ மீதும், அவரது அமைச்சரவை மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணையினை முன்மொழிந்தார். இதனை அதே கட்சியைச் சேர்ந்த விஜித ஹேரத் வழிமொழிந்தார். அதன் பின்னர் பிரதம மந்திரிக்கும், அமைச்சரவைக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 122 வாக்குகளால் சபையில் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார் (Ada Derana, Online: 2018.11.14, 12:10 PM).



படம் இல:02

நாடாளுமன்றத்தில் மகிந்த இராஜபக்ஷ மற்றும் அவரது அமைச்சரவைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது

பிரதம மந்திரி மகிந்த இராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையினை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள மறுத்திருந்தார். இது நிலையியற் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிகழவில்லை என்பது ஜனாதிபதியின் வாதமாக இருந்தது. இது தொடர்பான பல பேச்சு வார்த்தைகள், கலந்துரையாடல்கள் ஜனாதிபதி செயலகத்தில் பலதரப்பு அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதியால் நடாத்தப்பட்டது. 2018 ஆம்

ஆண்டு மார்கழி மாதம் 03 ஆம் திகதி ஐக்கிய தேசிய முன்னணித் (UNF) தலைவர்களுடன் நடத்திய கூட்டத்தில் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுக் கோரினாலும் ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாக முடியாது என்ற கருத்தில் இருந்து நான் விடுபட மாட்டேன் என பகிரங்கமாக ஜனாதிபதி அறிவித்தார். பிரதம மந்திரியுடன் ஏற்பட்ட பிணக்கு அரசியல் ரீதியானது என்பதை ஜனாதிபதி தனது நீண்ட உரையில் தெளிவுபடுத்தியிருத்தார். ஆனால் இதனை அரசியல் ரீதியாக அணுகுவதற்கான சூழலை உருவாக்காது தவிர்த்தமை ஜனாதிபதியின் சாணக்கியமற்ற செயலாகவே பதிவு செய்யப்பட்டது. மூன்று அரசியல் தலைவர்களும் தமக்கிடையிலான ஆளுமை மோதலை அரசியலமைப்புக்கு ஊடாக அணுக முற்பட்டமை இலங்கையின் ஆட்சி முறையில் பதற்றத்தையும், அரசியலமைப்பு நெருக்கடியினையும் பொருளாதாரப் பின்னடைவுகளையும் ஏற்படுத்தியதுடன், பொதுநிருவாக இயல்பு நிலை சீர்கெடவும் காரணமாகியது என்றே கூறலாம்.

### 7. யாதுரிமை எழுத்தாணை

யாதுரிமை எழுத்தாணை என்பது ஒருவர் எந்த அதிகாரத்தைக் கொண்டு பதவி வகித்தார் அல்லது வாக்குரிமை அளித்தார் என்பதை நிரூபிக்குமாறு அவருக்கு இடும் ஆணையாகும். இதனைப் பயன்படுத்தி மகிந்த இராஜபக்ஷ உட்பட அவரது அமைச்சரவைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் யாதுரிமை எழுத்தாணை (Writ of quo warranto) முறைப்பாடு 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 திகதி வெள்ளிக் கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 122 பாராளுமன்ற உறுப்பினர்கள் (UNP, TNA, JVP, SLMC, ACMC) இணைந்து குறித்த யாதுரிமை பேராணை முறைப்பாட்டைத் தாக்கல் செய்திருந்தனர். இம் முறைப்பாட்டில் "பிரதம மந்திரி மஹிந்த இராஜபக்ஷ மற்றும் அவரது அமைச்சரவைக்குப் பதவியிலிருப்பதற்குச் சட்டரீதியான அனுமதியில்லை. அவர்களின் நியமனங்கள் செல்லுபடியற்றதாக்கப் பட வேண்டும்" என உத்தரவிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. அத்துடன் "பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் பிரதம மந்திரி அலுவலகத்தில் அமர்ந்து பணியாற்றுவதற்கு பிரதம மந்திரி மஹிந்த இராஜபக்ஷ எவ்வித சட்டபூர்வமான தகுதியுமற்றவராகும். எனவே மஹிந்த இராஜபக்ஷ பிரதம மந்திரியாகப் பணியாற்றுவதைச்

செல்லுபடியற்றதாக்குவதுடன் 48 அமைச்சர்களின் பணிகளையும் செல்லுபடியற்றதாக்க வேண்டும் என உத்தரவிடுமாறு முறைப்பாட் டாளர்கள் கேட்டிருந்தனர்.

இம்முறைப்பாடு 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 03 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்முறைப்பாட்டிற்கான தீர்ப்பு மாலை மூன்று (03) மணிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. இத் தீர்ப்பில் மஹிந்த இராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவைக்கு இடைக்காலத் தடையுத்தரவு விதிக்கப்பட்டது. அத்துடன் பிரதம மந்திரிப் பதவியை வகித்தவர் உட்பட அமைச்சரவையில் உள்ள 49 உறுப்பினர்களையும் 2018ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12ஆம் திகதி புதன்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. அரசியல்யாப்புவாதம், முதன்மைப்படுத்தும் வலுவேறாக்கம் மற்றும் சமனிலைத்தலையீடு, சட்டவாட்சி, நீதிபரிபாலனம் என்பன மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் நிலைநிறுத்தப்பட்டது. ஆயினும் அரசியல் நோக்கிலான அரசியலமைப்புத் நெருக்கடி மேலும் உச்சமடைவதை இதன்மூலம் தடுக்கமுடியாமல் போனது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவுத் தீர்ப்பின் மூலம் பின்வரும் செயற்பாடுகளுக்கு இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டன (Daily News, Online: Tuesday, 2018.12.04, 01: 00):

1. பிரதமமந்திரி மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகச் செயற்படும் முதல் பிரதிவாதி (மஹிந்த இராஜபக்ஷ) இம் முறைப்பாடு மீதான இறுதி விசாரணை மற்றும் தீர்ப்பு வரும் வரை இக் கடமைகளை ஆற்றுவதற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாகச் செயற்படும் இரண்டிலிருந்து (2) இருபத்தியொன்பது (29) வரையிலான பிரதிவாதிகள் இம் முறைப்பாடு மீதான இறுதி விசாரணை மற்றும் தீர்ப்பு வரும் வரை தமது கடமைகளை ஆற்றுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு விதிக்கப்பட்டது.

3. அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களாகிய முப்பத்தொன் பதிலிருந்து (39) நாற்பத்தியொன்று (41) வரையிலான பிரதிவாதிகள்

இம் முறைப்பாடு மீதான இறுதி விசாரணை மற்றும் தீர்ப்பு வரும் வரை தமது கடமைகளை ஆற்றுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு விதிக்கப்பட்டது.

4. பிரதியமைச்சர்களாகிய நாற்பத்திரெண்டிலிருந்து (42) நாற்பத் தொன்பது (49) வரையிலான பிரதிவாதிகள் இம் முறைப்பாடு மீதான இறுதி விசாரணை மற்றும் தீர்ப்பு வரும்வரை தமது கடமைகளை ஆற்றுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு விதிக்கப் பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையுத்தரவினால் மகிந்த இராஜபக்ஷ அரசாங்கத்திற்குப் பின்வரும் விளைவுகள் ஏற்பட்டன:

1. பிரதம அமைச்சருக்குரிய எவ்வித அதிகாரத்தையும் மஹிந்த இராஜபக்ஷ பயன்படுத்த முடியாது போனது,
2. பிரதம அமைச்சருக்குரிய அலுவலகத்தினுள் பணியின் நிமித்தம் செல்ல முடியாது போனது,
3. பிரதம அமைச்சர் நிதிமந்திரியாகச் செயற்பட முடியாது போனது,
4. 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர் நியமனம் செய்யப்பட்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி அமைச் சரவைக் கூட்டங்களை நடாத்த முடியாது போனது,
5. மஹிந்த இராஜபக்ஷவின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் கடமைகளுக்காகத் தமது அமைச்சுக்களுக்குச் செல்ல முடியாது போனது,
6. இராஜாங்க அமைச்சர்கள் தமது அலுவலகங்களுக்குச் செல்ல முடியாது போனது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு எதிராக மேன்முறையீட்டு விண்ணப்பம் ஒன்றை 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மஹிந்த இராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். "மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவு அரசியலமைப்பிற்கு எதிரானது. இதுபோன்ற தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மேன்முறையீட்டு

நீதிமன்றுக்கு இல்லை. எனவே மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 03 ஆம் திகதி விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு சட்டவிரோதமானது" என்று தீர்ப்பளிக்குமாறு முறைப் பாட்டாளர் மஹிந்த இராஜபக்ஷ தனது மேன்முறையீட்டு முறைப்பாட்டில் கோரியிருந்தார். நல்லாட்சி அரசாங்கத்தினை ஜனாதிபதி கலைத்தமையின் பின்னர் அமைக்கப்பட்ட மகிந்த இராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இடைக்காலத் தடையுத்தரவு விதித்தமை, 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 03ஆம் திகதியிலிருந்து மார்கழி மாதம் 13ஆம் திகதி வரை, அரசாங்கம் இல்லாத குடியரசு என்ற நிலைக்கு இலங்கையை இட்டுச் சென்றது. அரசின் தலைவராகிய ஜனாதிபதி சகலதுறைகளுக்குமான அமைச்சராகச் செயல்படும் நிலை உருவாகியதுடன், சர்வவல்லமை பொருந்திய அரசின் தலைவர், நிறைவேற்றுத்துறையின் தலைவர், பொதுநிர்வாகத்தின் தலைவர் என்ற பல்பரிமாணத்தில் ஜனாதிபதி காட்சிதரும் நிலை உருவாகியது.

## 8. உயர்நீதிமன்றத் தீர்ப்பு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சரத்துக்கள் 17,35 மற்றும் 126 இன் பிரகாரம் ஜனாதிபதி இலங்கைப் பாராளு மன்றத்தைக் கலைத்தமை அடிப்படையுரிமை மீறல் எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் ஏழு பேர் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள்



சட்டமா அதிபர்

முன்னிலையில் விவாதிக்கப்பட்டது. இவ் அடிப்படையுரிமை மீறல் தொடர்பான முறைப்பாட்டின் தீர்ப்பு 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13 ஆம் திகதி ஏழு உயர்நீதிமன்ற நீதியரசர்களாலும் ஏகமனதாக வழங்கப்பட்டது. இத் தீர்ப்பின் சாராம்சம் பின்வருமாறு அமைந்திருந்தது:

i. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது பாராளு மன்றம் 2015ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 01ஆம் திகதி கூடியது. பாராளுமன்றம் கலைக்கப்படும் பிரகடனம் 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 09 ஆம் திகதி வெளியிடப்பட்டது. எட்டாவது பாராளுமன்றம் தனது முதல் கூட்டத்திலிருந்து மூன்று வருடங்கள், இரண்டு மாதங்கள், எட்டு நாட்கள் மாத்திரமே இயங்கியுள்ளது. பாராளுமன்றம் நான்கு வருடங்கள், ஆறு மாதங்கள் தொடர்ந்து இயங்கும் என்பதை அரசியலமைப்பின் அத்தியாயம் XI , சரத்து 70 உபசரத்து (1) தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு 2/3 பெரும்பான்மைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரும் தீர்மானம் எதுவும் முறைப்பாடு தாக்கல் செய்யப்படும் திகதி வரை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இந்நிலையில் ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைத்தமைக்கு எதிராக உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க முடிந்தது. பாராளுமன்றத்தை அரசியலமைப்பு விதிகளுக்கு மாறாகக் கலைத்தமை மூலம் ஜனாதிபதி பின்வரும் செயல்களுக்குப் பொறுப்பானவராக்கப்பட்டுள்ளதாக முறைப் பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்:

1. பாராளுமன்றத்தின் மீது அரசியலமைப்பிற்கு முரணாக தாக்குதல் நடாத்தியுள்ளார்,
2. ஜனாதிபதி தனக்குரிய அதிகாரங்களை மீறிச் செயற்பட்டுள்ளார், (Ultra Vires),
3. சட்டவிரோதமாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்,
4. மக்களின் சட்டத்துறை அதிகாரத்தின் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார்,
5. மக்கள் இறைமையை மீறியுள்ளார்,

6. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் உரிமைகளை மீறியுள்ளார்,

7. தன்னிச்சையான (Arbitray), பகுத்தறிவற்ற (Irrational), சலனபுத்தியுள்ள (Capricious), கோபமூட்டும் (Vexatious), காரணமற்ற (Unreasonable) செயல்களைப் புரிந்துள்ளார்.

ii. பாராளுமன்றம் அரசாங்க நிறுவனங்களில் பிரதானமானதொன்றாகும். இந்நிறுவனம் அரசாங்கத்தின் பிறிதொரு நிறுவனமாகிய நிறை வேற்றுத்துறையினால் அரசியலமைப்பிற்கு முரணாகத் தாக்கப் படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டு அதன் சுதந்திரம், அந்தஸ்து, வகிபாகம் பாதுகாக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு ரீதியான ஆட்சி, சட்டவாட்சி, ஜனநாயக செயல்முறை என்பன மீள்நிறுவப்பட வேண்டும்.

iii. அரசியலமைப்பின் சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ), சரத்து 62 மற்றும் சரத்து 70 என்பவைகள் புரிந்து கொள்ளப்பட்டும், பிரயோகிக்கப்பட்டும் தீர்ப்பு வழங்கப்பட்டது. சரத்து 70 உபசரத்து (1) இரண்டு பந்திகளைக் கொண்டது. ஜனாதிபதி பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கலாம், அமர்வை நிறுத்தலாம், கலைக்கலாம் என முதலாம் பந்தி கூறுகின்றது. முதலாம் பந்தியில் ஜனாதிபதிக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங் களைச் சரத்து 70 உபசரத்து (1) இன் இரண்டாம் பகுதி கட்டுப்படுத்துகின்றது. பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதிக் குரித்தான அதிகாரங்கள் தொடர்பாகச் சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) மற்றும் சரத்து 62 உபசரத்து (2) கூறினாலும் இவைகளையும் சரத்து 70 உபசரத்து (1) இன் இரண்டாம் பந்தி கட்டுப்படுத்துகின்றது.

iv. சரத்து 70 உபசரத்து (3) இன் பிரகாரம் பாராளுமன்ற அமர்வு நிறுத்தப்பட்டிருக்கும் காலத்தில் எந்த நேரத்திலாயினும் ஜனாதிபதி பிரகடனம் ஒன்றின் மூலம்

1. அமர்வுக்கென நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முந்தியதொரு திகதியில் கூடுமாறு பாராளுமன்றத்தை அழைக்கலாம்.

இத்திகதி பிரகடனத் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்கு குறைந்ததொரு திகதியாக இருத்தலாகாது. அல்லது

2. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் எனக் கூறுகின்றது.

எனவே சரத்து 70 உபசரத்து (3) இன் பிரகாரமும் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். ஆனால் சரத்து 70 உபசரத்து (3) இன் சட்டச்செயற்திறனை சரத்து 70 உபசரத்து (1) இன் இரண்டாம் பந்தி முழுமையாகக் கட்டுப்படுத்துகின்றது. எனவே சரத்து 70 உபசரத்து (3) இனை இலகுவாகப் புரிந்து கொள்ள வேறு எந்தவொரு நியாயங்களும் தேவையில்லை.

மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வின் அடிப்படையிலும், சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ), சரத்து 62 உபசரத்து (2) மற்றும் சரத்து 70 என்பவைகளுக்கு வழங்கப்படும் வியாக்கியானங்களின் அடிப்படையிலும் பின்வரும் முடிவுகளுக்கு வரமுடிந்தது ((In the Supreme Court of the Democratic Socialist Republic of Sri Lanka: 2018.12.13):

1. பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு அழைத்தல், அமர்வை நிறுத்துதல் மற்றும் கலைத்தல் தொடர்பான அதிகாரங்கள் சரத்து 33 உபசரத்து (2) பந்தி (இ) ஊடாக ஜனாதிபதிக்குரித் தாக்கப்பட்டுள்ளது.

2. அரசியலமைப்பு விதிகளுக்குட்பட்டே ஜனாதிபதி இவ் அதிகாரங்களை பயன்படுத்தலாம்.சரத்து 70 உபசரத்து (1) இன் இரண்டாம் பந்தி கூறும் வரையறைகளுக்குள்ளிருந்தே இவ் அதிகாரங்களை ஜனாதிபதி பயன்படுத்தலாம்.

3. சரத்து 70 உபசரத்து (1) இன் முதலாம் பந்தி குறிப்பிடுவது போன்று ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்.

4. ஆனால் சரத்து 70 உபசரத்து (1) இன் இரண்டாம் பந்தியின் சட்டச் செயற்பாட்டிற்கு இணங்க ஜனாதிபதி நான்கு வருடம் ஆறு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. அவ்வாறு கலைக்க வேண்டுமாயின் பாராளு

மன்றத்திற்குச் சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட 2/3 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு தீர்மானம் நிறைவேற்றி ஜனாதிபதியைக் கோருதல் வேண்டும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தைக் கலைப்பதா? அல்லது தொடர்ந்து இயங்க அனுமதிப்பதா? என்பதை ஜனாதிபதி தனது தற்துணிபின் பிரகாரம் தீர்மானம் மேற்கொள்ளலாம்.

5. பாராளுமன்றத்தின் ஆகக்குறைந்த காலமாகிய நான்கு வருடங்கள் ஆறு மாதங்களின் பின்னர் ஜனாதிபதி பாராளு மன்றத்தை அரசிலமைப்பின் பிரகாரம் வர்த்தமானப் பத்திரிகை பிரகடனம் மூலம் கலைக்கலாம்.

6. பாராளுமன்ற முதல் கூட்டத் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் பூர்த்தியான பின்னர், பாராளுமன்றம் தானாகக் கலைந்துவிடும். அரசியலமைப்பின் சரத்து 62 உபசரத்து (2) இன் பிரகாரம் இது தானாக நிகழும். இதற்கான ஜனாதிபதியின் தலையீடு எதுவும் இங்கு இருக்காது.

7. ஐந்து வருடங்களின் முடிவில் பாராளுமன்றம் தானாகக் கலையும். அதன் பின்னர் சரத்து 70 உபசரத்து (5) பந்தி (ஆ) வின் பிரகாரம் பொதுத் தேர்தலுக்கான திகதியைத் தீர்மானித்து ஜனாதிபதி பிரகடனப்படுத்த வேண்டும். பிரகடனம் வெளியிடப்பட்டு மூன்று மாதங்களுக்குள் புதிய பாராளுமன்றம் கூட்டப்படல் வேண்டும்.

vi. இலங்கையில் அரசியலமைப்பே மிக உயர்ந்ததாகும். அரசியலமைப்பு மீறப்படுதலை ஆரம்பத்தில் தடுப்பதே உயர்நீதிமன்றம் வழங்கக் கூடிய உயர்ந்தபட்ச தீர்வாக அமையமுடியும். பாராளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானப் பிரகடனம் அரசிலமைப்பின் சட்ட எல்லையினை மீறி வெளியிடப்பட்டுள்ளமை மூலம் முறைப்பாட் டாளர்களின் அடிப்படையுரிமைகள் மீறப்பட்டுள்ளன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டபூர்வமான பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலையிலும், நாட்டின் பிரசைகள் என்ற நிலையிலும் எந்தவொரு சட்டபூர்வமற்ற, தன்னிச்சையான (Arbitrary) அதிகாரப்

பிரயோகத்திலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு முறைப்பாட் டாளர்கள் உரிமையுடையவர்கள். அரசியலமைப்பின் சரத்து 12 உபசரத்து (1) இன் பிரகாரம் முறைப்பாட்டாளர்களின் உரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. வர்த்தமானப் பிரகடனம் அரசியலமைப்பை மீறியுள்ளதால் இப்பிரகடனம் சட்டபூர்மற்ற தாக்கப்பட்டுச் செல்லுபடியற்றதாக்கப்படுகிறது.

**9. முடிவுரை**

பிரான்சில் தற்போது நடைமுறையிலிருக்கும் ஐந்தாவது குடியரசு அரசாங்க முறைமைக்கான அரசியலமைப்பு 1958 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி இராணுவத் தளபதி சார்ல்ஸ் டீ கோல் (Charls De Gaulle) என்பவரினால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதாகும். பிரான்ஸ்சின் ஐந்தாவது குடியரசு அரசியலமைப்பின் சாராம்சங்களை உள்வாங்கி 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தனா இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பினை உருவாக்கியிருந்தார். மூலயாப்பில் ஜனாதிபதி சர்வாதிகாரி போன்று செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்ததுடன், அமைச்சர்களை வழிநடாத்தும் அதிகாரத் தையும் ஜனாதிபதியே கொண்டிருந்தார். இவ்யாப்பிற்கு பத்தொன்பதாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட திருத்தம் இதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஜனாதிபதியின் அதிகாரம் பாராளுமன்றத்திற்கும் பிரதம மந்திரிக்கும் பகிரப்பட்டது.

நீண்ட காலமாக ஜனாதிபதியின் தன்னிச்சையான அதிகாரச் செயற்பாடுகளுக்கு உட்படக் கூடியதாக இருந்த பிரதம மந்திரியும் அமைச்சரவையும் பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் இவ்வாறான நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரகாரம் மரணம், இராஜினாமா, பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழத்தல், வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படல், பாராளுமன்ற உறுப்புரிமையை இழத்தல் போன்ற சூழ்நிலைகளில் மாத்திரமே பிரதம மந்திரியின் பதவி வெற்றிடமாகும். பிரதமமந்திரியின் பதவிநிலை ஜனாதிபதியால் இல்லாதாக்கப்படும் சரத்துக்கள் பத்தொன்பதாவது திருத்தத்தில் சேர்க்கப்படவில்லை. பதிலாக ஜனாதிபதி, பிரதமமந்திரி, பாராளுமன்றம் ஆகியவற்றிற்கிடையிலான உறவில் வெஸ்ட் மின்ஸ்டர் (Westminster) கட்டமைப்பு மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன்

பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்திலுள்ள சரத்துக்களுக்கும் மூல அரசியலமைப்பிலுள்ள சரத்துக்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு (Link) தெளிவற்றதாகவுள்ளது. இதனால் அரசியலமைப்பினை ஒவ்வொருவரும் தமக்கு ஏற்றவாறு வியாக்கியானப்படுத்தும் நிலை பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பின்னர் உருவாகியது எனலாம்.

தேசிய அரசாங்கம் ஒன்றின் பங்காளிக் கட்சி உரிய காலத்திற்கு முன்னர் அல்லது ஒப்பந்த காலத்திற்கு முன்னர் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறினால் இயங்குநிலையிலிருக்கும் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என பொருள் கொள்ளல் வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப் படவில்லை. எனவே தேசிய அரசாங்கம் ஒன்றிலிருந்து பங்காளிக் கட்சி விலகினால் அல்லது ஒப்பந்தம் காலாவதியானால் பிரதமமந்திரிப் பதவி வெற்றிடமாகியுள்ளதாக அரசியலமைப்பு ரீதியாகப் பொருள் கொள்ள முடியாது. அவ்வாறு பொருள் கொள்ளப்படுமாயின் அது வெறுமனே அரசியல் அபிலாசையுடையதொன்றாகவே பொருள் கொள்ளப்பட வேண்டும். தேசிய அரசாங்கம் ஒன்றின் பங்காளிகள் வெளியேறியுள்ளனர். எனவே பிரதமமந்திரியும் அமைச்சரவையும் பதவி இழந்துவிட்டனர் எனப் பொருள் கொள்ள முடியாது.

பதிலாக 106 ஆசனங்களுடன் பாராளுமன்றத்திலுள்ள ஐக்கிய தேசிய முன்னணிக்கு பெரும்பான்மையினை நிரூபித்துக் காட்டவேண்டிய தேவை மீண்டும் உருவாக்கப்பட்டது. அல்லது பாராளுமன்றத்தில் உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற கட்சி அல்லது கட்சிகள் தமது பெரும்பான்மையினை நிரூபிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததாகவே கருத முடியும். இம்முயற்சியில் கட்சி அல்லது கட்சிகள் தோல்வியடைந்தால் சரத்து 70 உபசரத்து (1) இரண்டாம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பாராளுமன்றம் செயற்பட வேண்டும். இதில் தனது பதவி நிலை காரணமாக ஏனைய அரசாங்க நிறுவனங்களின் செயல்களில் தலையீடு செய்யும் அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றிருக்கவில்லை. அரசியலமைப்பின் சரத்து 30 உபசரத்து (2) இன் பிரகாரம் குடியரசின் ஜனாதிபதி தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படுகிறார். இவ்வகையில் ஜனாதிபதி அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்டவராகும். பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் சரத்து 33 (அ) வின் பிரகாரம் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கும் பொறுப்புக் கூறவேண்டும். ஆகவே ஜனாதிபதியின் செயல்கள் யாவும் அரசியலமைப்பு ரீதியானதாக

இருக்க வேண்டும். சட்டவாட்சி மற்றும் வலுவேறாக்கற் தத்துவத்திற்கு ஏற்ப அரசியல்யாப்புவாதத்தினால் ஜனாதிபதி வழிநடாத்தப்பட்டுக் கருமங்களை ஆற்றவேண்டும். தனது சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடம்கொடுத்துச் சட்டத்துறை தொடர்பான தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்தமை மூலம் அரசியலமைப்புத் தெளிவின்மை இருப்பது போன்றதொரு அரசியல்காட்சி உருவாக்கப்பட்டது.

இலங்கை பொஜனமுன்னணி (பெரமுன) பாராளுமன்றத்தில் எவ்வித ஆசனங்களையும் பெற்றிருக்கவில்லை. இக்கட்சி அங்கத்தவராகிய மகிந்த இராஜபக்ஷவிடம் பிரதம மந்திரிப்பதவியை வழங்கியமை அரசியல் நோக்கத்துடன் கூடிய அதிகார துஷ்பிரயோக நகர்வேயன்றி அரசியலமைப்பு ரீதியான நகர்வு அல்ல. இங்கிருந்தே அரசியல் நெருக்கடியும், அமைதியின்மையும் நாட்டில் தோன்றியது எனவும், மக்கள் இறைமையும், அரசியலமைப்பும் உதாசீனம் செய்யப்பட்டன எனவும் கூறமுடியும்.

ஜனாதிபதி 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28 ஆம் திகதி நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையும், 2018 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 4 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட மகாநாடு "தீர்மானம் நாட்டுக்காக" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற போது ஆற்றிய உரையும் அரசியலமைப்பு சார்ந்ததாக இருப்பதற்குப் பதிலாக அரசியல் சார்ந்த தாகவே இருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் அமைதியின்மைக்கான தனது தரப்பு நியாயங்களை இவ்வுரையில் பின்வருமாறு முன்வைத்திருந்தார்:

i. 2015ஆம் ஆண்டு தை மாதம் 09ஆம் திகதி நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி யேற்றார். 2015ஆம் ஆண்டு தை மாதம் 08ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் 6,250,000 வாக்குகளைப் பெற்று உருவாக்கிய தூய்மையான அந்த அரசியல் பயணத்தையும் அதன் கருப் பொருளையும் அப்பட்டமாக அழித்தார்.

ii. இச்செயலை மூன்றரை வருடங்களாக நான் சகித்துக்கொண்டு மிகக் கடினமான பயணத்தை மேற்கொண்டேன். அது ஒரு இலகு வான பயணமல்ல. அமைச்சரவைக்கு இந்த நிலைமை தெரியும்.

ஆளும் கட்சிக்கும் தெரியும். மூன்றரை வருடப் பிரச்சினைகள் பற்றி நாட்டுக்கே தெரியும்.

iii. ரணில் விக்கிரமசிங்கவை நீக்கி மஹிந்த இராஜபக்ஷவை நியமித்தது திடீர் நிகழ்வல்ல. அது மூன்றரை வருட சவால் நிறைந்த கஷ்டமான தொரு பயணத்தில் மேற்கொண்ட தீர்மானமாகும். ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசியல் எண்ணக்கருவை வெளிப்படை யாக அழித்தது மட்டுமன்றி நாட்டையும் அழிவுக்குள்ளாக்கினார்.

iv. ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டின் முக்கிய அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அழிவுக்குள்ளாக்கினார். அவரினால் நானும் பல பாதிப்புகளுக்கு உள்ளானேன்.

v. நல்லாட்சி அரசாங்கத்தை அழிவுக்குள்ளாக்கிய, நாட்டை அழிவுக் குள்ளாக்கிய, ஐக்கிய தேசியக் கட்சியை அழிவுக்குள்ளாக்கிய, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க முடியுமாகவிருந்த ஒரே தீர்வு அவரை பிரதமர் பதவியில் இருந்து விரட்டியடிப்பதே என நான் தீர்மானித்தேன்.

vi. நாம் எமக்கு பொருத்தமான அரசியல் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். மத்திய வங்கியில் இடம்பெற்ற பகல் கொள்ளை பற்றி நான் கடந்த காலங்களில் கூறினேன்.

vii. பதின்மூன்றாவது அரசியலமைப்பினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை அவர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து சில சட்டங்களின் மூலம் திரும்பப் பெற்றார். அவர் கொண்டு வந்த பல சட்டங்களை நான் எதிர்த்தேன்.

viii. பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இந்த 225 உறுப்பினர்களும் கையொப்பமிட்டு கொடுத்தாலும் கூட நான் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் அமர்த்த மாட்டேன். அதற்குக் காரணம் அவருக்கும் எனக்கும் இடையே உள்ள தனிப்பட்ட பிரச்சினையோ எம் இருவருக்கும் இடையிலான நிறங்கள் பற்றிய பிரச்சினையோ அல்ல.

ix. அவர் இந்த நாட்டுக்குப் பொருந்தாத அரசியல்வாதி. அவரது நோக்கு இந்த நாட்டுக்கு உகந்ததல்ல. அவரது சிந்தனையும்

இந்த நாட்டுக்கு உகந்ததல்ல. தேசியத்துவம், நமது என்ற உணர்வு, நமது மரபுரிமைகள், கலாசாரம், பழக்க வழக்கங்கள், நமது சம்பிரதாயம், நமது பௌத்த மற்றும் ஏனைய மதக் கோட்பாடுகள் ஆகிய எதுவுமே அவரிடம் இல்லை.

அரசியல் சார்ந்து ஜனாதிபதிக்கு பிரதம மந்திரியுடன் இருந்த ஒவ்வாமைகளுக்கு அரசியலமைப்பு ரீதியாக விளக்கமளிக்க ஜனாதிபதி முயற்சித்திருந்தமை இவ் உரையில் புலனாகியது. இதனாலேயே இவ் விவகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் வரை சென்று அடிப்படையுரிமை மீறலாக முறைப்பாடு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் தெளிவில்லாமல் ஜனாதிபதி கருமங்களை ஆற்றினார் எனக் கூறுவதைவிட மிகத் தெளிவுடன் அரசியலமைப்பு நெருக்கடிக்கு ஊடாக அரசியல் ரீதியான நகர்வுகளை மேற்கொண்டு அதிகாரத்திற்கான போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சித்தார் எனக் கூறுவதே பொருத்தமானதாகும் எனலாம்.

ஜனாதிபதி அரசியல் சார்ந்த விடயங்களை அரசியலமைப்பிற்கு ஊடாக நியாயம் தேட முயன்றமை தகுந்ததொரு செயலாகக் கருதப்படு மாயின் அது எதிர்காலத்தில் இலங்கையின் ஆட்சிமுறைக்குப் பாதகமான முன்னுதாரணமாக அமைந்துவிடலாம்.

ஜனாதிபதி எந்தவேளையிலும் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என்ற முடிவு பெறப்படுமாயின், அரசியலமைப்பு ரீதியான சர்வாதிகாரியாக ஜனாதிபதி நிலை கொண்டிருப்பார். எனவே அரசியலமைப்பிற்குப் புறம்பாக உயர்குழாமினர் மத்தியில் நிகழ்ந்த அதிகாரப் போட்டியினால் மக்களின் அடிப்படையுரிமை மீறப்பட்டுள்ளது எனச் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அரசியலமைப்பின் சரத்துக்கள் மற்றும் அடிப்படை யுரிமைச் சரத்துக்கள் ஊடாக அரசாங்க நிறுவனங்களில் ஒன்றாகிய உயர்நீதிமன்றம் சட்டவாட்சித் தத்துவத்தினடிப்படையில் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன்மூலம் நீதித்துறையின் நிறுவன ரீதியான சுதந்திரம் மற்றும் தன்னாட்சியை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்திக் கொண்டது. இதன்மூலம் வலுவேறாக்கற் தத்துவம் மற்றும் சமநிலைத் தலையீடு உயர்நீதிமன்றத்தினால் பாதுகாக்கப்பட்டுச் சட்டவாட்சி நிலைநிறுத்தப்பட்டது.

**பின்னிணைப்பு**

## 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் கூட்டணியும் அங்கத்துவக் கட்சிகளும்

1. நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி
   - ஐக்கிய தேசியக் கட்சி
   - அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்
   - ஜாதிக ஹெல உறுமய
   - முஸ்லிம் தமிழ் தேசிய முன்னணி
   - ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்
   - தமிழ் முற்போக்கு கூட்டணி
   - ஐக்கிய இடதுசாரி முன்னணி
2. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
   - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
   - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
   - பிரசைகள் முன்னணி
   - ஜனநாயக மக்கள் காங்கிரஸ்
   - லிபரல்கட்சி
   - மகாஜன எக்சத் பெரமுன
   - தேசிய காங்கிரஸ்
   - தேசிய சுதந்திர முன்னணி
   - பிவித்துறு ஹெல உறுமய

- சோசலிசக் கூட்டணி
  - இலங்கை கம்யூனிசக் கட்சி
  - இலங்கை சமசமாஜக் கட்சி
  - தேசிய விடுதலை மக்கள் முன்னணி
  - இலங்கை மக்கள் கட்சி
- தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்

3. **தமிழ் தேசியக் கூட்டமைப்பு**
   - இலங்கைத் தமிழரசுக் கட்சி
   - ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
   - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
   - தமிழீழ விடுதலை இயக்கம்
4. **ஜனதா விமுக்திப் பெரமுன**
5. **ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**
6. **ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**

# உசாத்துணைகள்


***A Little Fireworks at the Seemingly Calm Supreme Court,*** Colombo Telegraph, December 6, 2018, URL Available at https://www.colombotelegraph.com/index.php/a-little-fireworks- at-the-seemingly-calm-supreme-court/

***Declaration of the Rights of Man and Citizen , Approved by the National Assembly of France,*** August 26, 1789, https://www1.curriculum.edu.au/ddunits/downloads/pdf/dec_of_rights.pdf

***FR Petition Against Dissolution of Parliament Delving into Constitutional abyss,*** Daily Mirror, 2018-12-10 00:02:13, Online Edition, URL Available at http://www.dailymirror.lk/article/FR-petition-against-dissolution-of-Parliament-Delving-into-Constitutional-abyss-159542.html?fbclid=IwAR2eHaBTgcmn4Q8MKu0ss4Mt_IeYKXnFExLd20R68_fb4e0U92_X7oB77V4

***Interim Order Extended till Dec.8: Further Argument Today,*** Daily News, Friday, December 7, 2018 - 01:04, Online Edition, URL Available at http://www.dailynews.lk/2018/12/07/law-order/170625/interim-order-extended-till-dec8-further-argument-today

***In the Matter of an Application under and in terms of Articles 17, 35 and 126 of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka,*** in the Supreme Court Of The Democratic Socialist Republic Of Sri Lanka, 13th December 2018, URL Available at https://www.cpalanka.org/wp-content/uploads/2018/11/sc_fr_351_2018.pdf

***MOU Signed between SLFP and UNP Expires Today,*** Daily Mirror, 31 December 2017 11:03 pm, URL Available at http://www.dailymirror.lk/143137/MoU-signed-between-SLFP-and-UNP-expires-today

***Petitions Against Dissolution of Parliament: Further Argument Fixed for Today,*** Daily News Wednesday, December 5, 2018 - 01:00, Online Edition, URL Available at http://www.dailynews.lk/2018/12/05/law-order/170374/further-argument-fixed-today?page=66

***President Assured to end the Political Unrest of the Country by Next Week,*** PMD News (Ge) ,Tuesday December 4th, 2018, URL Available at http://www.pmdnews.lk/%E0%

***President Maithripala Sirisena's Addressed to the Nation,*** on October 28, 2018, URL Available at http://www.president.gov.lk/president-maithripala-sirisenas-addressed-to-the-nation-on-october-28-2018/

***Reconvene Parliament: Speaker Makes 'Kind Request' to Prez,*** Daily mirror, online, 2018.10.30 (12:38:42), URL Available at http://www.dailymirror.lk/article/Reconvene-Parliament-Speaker-makes-kind-request-to-Prez-157618.html

***Results of Local Authorities Elections – 2018,*** Election Commission, Election Secretariat, URL Available at http://elections.gov.lk/web/en/elections/elections-results/local-authorities-elections-results/results-of-local-authorities-elections -2018/

***SC has no Jurisdiction to Hear Petition AG,*** Onlanka, December 06, 2018, URL Available at https://www.onlanka.com/news/sc-has-no-jurisdiction-to-hear-petitions-ag.html

***Standing Orders of the Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka,*** These new Standing Orders were approved and adopted by Parliament on 07 March 2018, and to be effective from 15 April 2018, Published by the Parliament Secretariat, URL Available https://www.parliament.lk/files/pdf/standing-orders-en.pdf

***The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka,*** EXTRAORDINARY, No. 2094/43 - FRIDAY, OCTOBER 26, 2018, URL Available at http://www.documents.gov.lk/files/egz/2018/10/2094-43_E.pdf

***The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka,*** EXTRAORDINARY, No. 2094/44 - FRIDAY, OCTOBER 26, 2018, URL Available at http://www.documents.gov.lk/files/egz/2018/10/2094-44_E.pdf

***The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka,*** EXTRAORDINARY, No. 2094/45 - SATURDAY, OCTOBER 27, 2018, URL Available at https://www.parliament.lk/uploads/documents/gazettes/20181027-2094-45-en.pdf

***The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka,*** EXTRAORDINARY, No. 2095/50 - SUNDAY NOVEMBER 04, 2018, URL Available at https://parliament.lk/uploads/documents/gazettes/20181104-2095-50-en.pdf

***The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka,*** EXTRAORDINARY No. 2096/70 - FRIDAY NOVEMBER 09, 2018, URL Available at https://www.parliament.lk/uploads/documents/gazettes/20181109-2096-70-en.pdf

***Universal Declaration of Human Rights, 2015,*** United Nations, http://www.un.org/en/udhrbook/pdf/udhr_booklet_en_web.pdf

***UNP and SLFP Reach a Two-Year Agreement,*** News first, 21 Aug, 2015, 8:54 PM, URL Available at https://www.newsfirst.lk/2015/08/21/unp-and-slfp-reach-a-two-year-agreement/107750/

***UPFA: Government Vs Joint Opposition,*** Manthri.lk, URL Available at http://www.manthri.lk/en/blog/posts/upfa-government-vs-joint-opposition

***Writ of Quo Warranto against Mahinda and others: APPEAL COURT ISSUES INTERIM ORDER,*** Daily News, Tuesday, December 4, 2018 - 01:00, Online Edition, URL Available at http://www.dailynews.lk/2018/12/04/law-order/170231/appeal-court-issues-interim-order

***122 MPs Signed No Confidence Against PM & Cabinet - Ranil,*** Ada Derana, November 14, 2018 12:10 pm, URL Available at http://www.adaderana.lk/news/51425/122-mps-signed-no-confidence-against-pm-cabinet-ranil

***இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு (2015, மே 15 ஆம் திகதி வரையிலான திருத்தங்களுடன்), மறுபதிப்பு 2015, பாராளுமன்றச் செயலகத்தால் வெளியிடப்பட்டது.*** Online Edition URL Available at https://www.parliament.lk/files/pdf/constitution-ta.pdf

## இலங்கையில் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையிலான அரசியலமைப்பு நெருக்கடி - 2018

கலாநிதி தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆம் திகதி எவ்வித முன்னறிவித்தலும் இன்றி ரணில் விக்கிரம சிங்க அவர்களை பிரதமமந்திரிப் பதவியிலிருந்து நீக்கியதுடன், அரசியல் எதிரியாக அதுவரை அவரால் கருதப்பட்ட மகிந்த இராஜபக்ஷ அவர்களைப் பிரதம மந்திரியாக நியமனம் செய்தார். இதன் உச்சக்கட்டச் செயலாக 2018ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 09ஆம் திகதி பாராளுமன்றத்தினையும் கலைத்துத் தேர்தலுக்கான திகதியையும் அறிவித் திருந்தார். இவ்வாறு அரசியலமைப்புக்கு மாறாகச் செயற்பட்டமை மூலம் அரசியலமைப்பு ரீதியான வன்முறையினை ஜனாதிபதி புரிந்து நாட்டின் சட்டவாட்சிக்குச் சவால் விடுத்தார் எனவும் மக்கள் இறைமை, வலுவேறாக்கம், அடிப்படையுரிமைகள் போன்றவற்றிற்கு சவால் விடுத்து, உறுதியற்ற அரசியல் நிலைமையினை நாட்டில் உருவாக்கினார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டார். அரசியல் உறுதியற்ற இந் நெருக்கடி நிலையிலிருந்து நாட்டினை உயர்நீதிமன்றமே பாதுகாத்தது. உயர்நீதிமன்றம் சட்டவாட்சியையும், மக்கள் இறை மையையும் பாதுகாத்ததுடன், சட்டமே உயர்ந்தது என்பதையும், சட்டத்திற்கு மேலானவர்கள் யாரும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்தியது. 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை இலங்கையில் நிலவிய இத்தகைய அசாதாரண அரசியல் நெருக்கடி நிலை குறித்து தர்க்க ரீதியாக இத்தனிவரைபு நூல் (Monograph) விவாதிக்கின்றது.



தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்: இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் சிறப்புக்கலைமாணிப் பட்டத்தையும் (B.A Hons), பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டத் தையும் (MPhil), யாழ்.பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் (PhD) பெற்றுள்ளர். யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவர் (1989-1993) தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சமூகவிஞ்ஞானங்கள் துறையில் அரசியல் விஞ்ஞான கற்கை நெறி முதுநிலை விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். சமூகவிஞ்ஞானங்கள் துறையின் தலைவராகக் (2003-2006) கடமையாற்றிய இவர் கலாநிதிப் பட்டப்படிப்பிற்கான NCAS புலமைப் பரிசிலையும் பெற்றுள்ளார். கற்பித்தலில் 30வருடகால அனுபவத்தைக் கொண்டுள்ள இவர், 5 நூல்களை எழுதியுள்ளார். 4 தொகுப்பு நூல்களில் இவரால் எழுதப்பெற்ற அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன. தேசிய மற்றும் சர்வதேசிய ஆய்வுச் சஞ்சிகைகள் பலவற்றில் ஆய்வுக் கட்டுரைகளையும், தேசிய பத்திரிகைகளில் சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பாக பல கட்டுரைகளையும் எழுதியுள்ள இவரின் முதலாவது தனிவரைபு நூல் (Monograph) இதுவாகும்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: அரசியல்

ISBN 978-955-659-626-7

9 789556 596267

விலை ரூபா 200.00

#814